# களத்தில்



விடுதலைப் போராட்டம் என்பது இரத்தம் சிந்தும் புரட்சிகர அரசியல் பாதை, கல்லும் முள்ளும் நிறைந்த கடினமான பாதை. வியர்வை சிந்தி, கண்ணீர் சிந்தி, இரத்தம் சிந்தி, தாங்கொணாத் துன்பத்தின் பரிசாகப் பெறுவது தான் சுதந்திரம்.

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

(21.10.1999) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள் (197) அன்பளிப்பு : 60 p




# சிங்கள இராணுவத்திற்கு பெரும் சேதம்

## * மாங்குளத்திற்கு கிழக்கு மேற்காக நகர இராணுவம் முயற்சி
## * புலிகளின் பீரங்கி எறிகணை வீச்சில் இராணுவம் அகப்பட்டது

**மாங்குளம் பகுதிகள் ஊடாக முன்னேற முயன்ற சிங்களப்படைகள் மீது புலிகள் பலத்த பதிலடித் தாக்குதல் நடாத்தியுள்ளனர். இத் தாக்குதல்களில் நூற்றுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளதுடன் ஐந்நூறு-க்கு மேற்பட்ட படையினர் படுகாயப் படுத்தப்பட்டுள்ளனர்.**

கடந்த வியாழன் (14.10.99) காலை சிங்களப்படைகள் விடுதலைப் புலிகளின் முன்னரங்க காவல் அரண்களை உடைத்து அம்பகாமம், வவுனிக்குளம் முனைகள் ஊடாக முன்னோக்கி நகர முயன்றனர். மாங்குளத்திற்கு மேற்காகவும் கிழக்காகவும் இருமுனைகளில் இம் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இப் பாரிய இராணுவ நடவடிக்கைக்கு உதவியாக கனரக பீரங்கித் தாக்குதல்களும் விமான குண்டுவீச்சுக்களும் சரமாரியாக நடாத்தப்பட்டது. தமது 55ஆம் படைப்பிரிவும் 56ஆம் படைப்பிரிவும் இந் நடவடிக்கைகளில் பங்கேற்றதாக சிங்கள இராணுவம் தெரிவித்துள்ளது. இந் நடவடிக்கைகளுக்கு சிங்களத்தின் முன்னணித் தளபதிகளில் ஒருவரான மேஜர் ஜெனரல் வசந்த பெரேரா தலைமையேற்று நடாத்தினார்.

இப் பாரிய நடவடிக்கையை எதிர்த்து விடுதலைப் புலிகள் கடும் பதிலடிச்சமரை நடாத்தியுள்ளனர். சிங்கள இராணுவ நிலைகள்மீது புலிகளின் பீரங்கி மற்றும் மோட்டார்கள் பலத்த தாக்குதலைத் தொடுத்து பெரும் சேதாரத்தை கொடுத்தது.

கடும் பதிலடிச்சமரின் பின்னர் வவுனிக்குளம் ஊடாக முன்னேற முயன்ற துருப்பினரை புலிகள் பழைய நிலைகளுக்கு விரட்டியடித்தனர். அம்பகாமம் ஊடாக முன்னேறிய படையினர் புலிகளின் தாக்குதலில் அகப்பட்டு பெரும் சேதத்தை எதிர்கொண்டனர்.

இத்தாக்குதல்களில் பங்கேற்ற 48 போராளிகள் வீரச்சாவைத் தழுவியுள்ளனர் என தலைமைப் பணிமனையிலிருந்து கிடைக்கப் பெற்ற இறுதி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நகர்வு முயற்சிக்கு 'ஒப்பரேசன் வாட்டர்சேட்' என சிங்கள இராணுவம் பெயர்சூட்டியிருந்தது. ஆயினும் இராணுவ தலைமைப் பீடத்தினால் விடுக்கப்பட்ட அறிக்கையானது தமது நகர்வுத் திட்டத்தை மறைத்து புலிகள் தமது நிலைகளை தாக்கியதாக செய்தி வெளியிட்டது. எனினும் இவ் அறிவிப்பு வெளியாகி 12 மணித்தியாலங்களின் பின்னர் வெளிவந்த கொழும்பு ஏடுகளில் நடவடிக்கை 'வாட்டர்சேட்' இடம்பெறுவதாக செய்திவெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து இராணுவத் த்லைமையகம் விடுத்த மறு அறிக்கையிலும் நகர்வு முயற்சியை இராணுவம் ஒப்புக்கொள்ளவில்லை. இத்தாக்குதல்கள் கடந்த மாதம் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட ரணகோச 5க்கு எதிரான நடவடிக்கையை ஒத்ததாக அமைந்துள்ளது.

இந் நடவடிக்கைகள் பற்றிய மேலதிக தகவல்கள் தலைமைப் பணிமனையால் வெளியிடப்படவில்லை.

இச்சமரில் வீரச்சாவை தழுவிக் கொண்ட போராளிகளுக்கு எமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

## ஆறு கடற்கரும்புலிகள் வீரச்சாவு

முல்லைக் கடற்பரப்பில் சிங்கள கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்கும் இடையில்பலமணிநேர சமர் இடம்பெற்றுள்ளது. கடந்த 14.10.99 இரவு பத்து மணியளவில் ஆரம்பமான இச்சமர் மறுதினம் அதிகாலை மூன்று மணிவரை இடம்பெற்றது. கடற்கரும் புலிகளின் அணியும் சமரில் பங்கேற்றது. இதன்போது நான்கு டோரா பீரங்கிப் படகுகளை கடற்புலிகள் சேதப்படுத்தினர்.

இத் தாக்குதல்களில் ஈடுபட்டிருந்த கடற்கரும் புலிகளின் வெடிமருந்து ஏற்றிய படகுகள் தவறுதலாக மோதிக்கொண்டதால் படகுகள் வெடித்து ஆறு கரும் புலிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர். லெப். கேணல் அருந்தவன் (கிருஸ்ணபிள்ளை உதயகுமார்), லெப்.கேணல் பழனியப்பன் (ரங்கையா மகேந்திரன்), மேஜர் பரணி (யோகநாதன் அமிர்நாத்), மேஜர் காரிமகால் (அரியக்குட்டி கலைமதி), மேஜர் சூரியப்பிரியா (அல்போன்சராஜ் யன்சிராணி) கப்டன் சுதாகரன் (ராசநாயகம் பிரசன்னா) ஆகியோரே வீரச்சாவைத் தழுவியவராவார்கள் கடற்புலி மேஜர் துவாகரன் (சங்கரன் ராஜ்குமார்) அவர்களும் சமரில் வீரச்சாவை தழுவியுள்ளார்.

தேசத்தை காக்கும் போரில் தம்மை அர்ப்பணித்த அப் போராளிகளுக்கு எமது வீரவணக்கத்தை தெரிவிக்கின்றோம்.

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

www.tamilarangam.net



# தெளிவற்ற பேச்சுக்கள் உணர்த்தும் உண்மை

தமிழீழ விடுதலைப் புலிகள் இலங்கைத்தீவின் தேசிய இனங்களுக்கு இடையிலான முரண்பாட்டிற்கு மிகத் தெளிவாகவும் உறுதியாகவும் மூன்றாம்தரப்பு மத்தியத்துவத்துடனான அமைதிப் பேச்சுவார்த்தைகளை வலியுறுத்தி வருவது உலகறிந்த உண்மை. இந்த சமாதான முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கக்கூடிய வகையில் சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா தமிழீழ விடுதலைப் புலிகளுடன் எந்தவிதமான அமைதிப் பேச்சுவார்த்தைகளிலும் இப்போதைக்கு தனது அரசாங்கம் ஈடுபடமாட்டாது என ஆங்கிலப் பத்திரிகையான ஹிந்துவுக்குப் பேட்டியளித்துள்ளார்.

ஆயினும் சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா ஒரு கிழமைக்கு முன்னதாக பேச்சுவார்த்தை மூலமே இந்த பதினாறு ஆண்டுகால முரண்பாட்டிற்குத் தீர்வு காணமுடியுமென கூறியதாக குறிப்பிட்டுள்ள பத்திரிகையாளர் சூசன்னா பிரைஸ் சிறீலங்கா ஜனாதிபதியின் முன்னுக்குப்பின் முரணான பேச்சுக்கள் தெளிவற்ற தன்மையை தருவதாக கூறியுள்ளார்.



சிறீலங்கா ஜனாதிபதி மட்டு மல்ல அவரின் அமைச்சரவைச் சகபாடிகளும் நேரத்திற்கு ஒரு கதை பேசி சிறீலங்கா அரசாங்கத்தின் தெளிவற்ற தன்மையை நன்கு தெளிவாக்கி வருகின்றனர். சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் நியூயோர்க்கில் ஐக்கிய நாடுகள் சபையின் தொடர்பாளர்களுக்கு மத்தியில் உரையாற்றுகையில் மூன்றாம்தரப்பு மத்தியத்தத்தை அனுமதிக்க மாட்டோம் என சூளுரைத்ததை யாவரும் அறிவர். அதே கதிர்காமர் சண் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் பேச்சுவார்த்தைக்கு மத்தியத்தர்களை அனுமதியோம்–ஆனால் வசதிசெய்து கொடுப்பவர்களை அனுமதிப்போம் எனக் கூறியுள்ளார். தான் ஐக்கிய நாடுகள் சபை உட்பட எவரதும் மத்தியத்துவம் வேண்டாம் எனக் கூறிய கருத்துக்கு புதிய விளக்கமாக இதைக் கூறியுள்ளார். இதன் மூலம் அவர் சிறீலங்கா கொடுக்க விரும்பும் தீர்வுக்கு விடுதலைப் புலிகளை வழிப்படுத்தக் கூடிய ஒருவரையே சிறீலங்கா தேடுகின்றது என்பதை தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார். தவிர நீதியான பாதுகாப்பான அமைதியினை தமிழ் மக்கள் பெறக் கூடிய வழியிலான பேச்சுவார்த்தை ஒன்றை நெறிப்படுத்தக் கூடியவர்களான மத்தியத்தர்களை தலையிட வேண்டாம் எனவும் அவர் பகிரங்கமாக எச்சரித்துள்ளார்.

இதற்கிடையே சிறீலங்கா அமைச்சரவையின் பிரதி தொலைத்தொடர்பு வெகுஜனத் தொடர்பு அமைச்சரான ஹிஸ்புல்லா, மூன்றாம்தரப்பு மத்தியத்துவமே வேண்டுமென அடித்துப் பேசியுள்ளார்.

இவ்வாறாக சிறீலங்கா அமைச்சர்களும் ஜனாதிபதியும் முன்னுக்குப்பின் முரண்பாடாகப் பேசுவதற்கு அடிப்படைக் காரணம் சிறீலங்கா அரசாங்கத்திடம் தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வை ஏற்படுத்துவதற்கான எண்ணமோ அல்லது திட்டங்களோ அன்றும் இன்றும் இல்லை என்பதேயாகும். இந்த உண்மையை உலகு இனங்கண்டு செயற்பட வேண்டிய நேரமிது.

இந்த உண்மையை சிறீலங்காப் பாராளுமன்றத்தில் அனுரா பண்டாரநாயக்கா ஆற்றிய உரை உலகிற்கு மேலும் தெளிவாக்கியுள்ளது. விடுதலைப் புலிகளை பல்லாயிரக்கணக்கான இந்திய இராணுவத்தின் துணையுடனேயே வெல்லமுடியாமல்போனது. அதன் பின்னர் எத்தனையோ இராணுவ நடவடிக்கைகளின் மூலம் அதனை செய்யமுடியாதுபோனது. யாழ்ப்பாணத்தை மீட்டுவிட்டதாக கூறுகின்றனர். ஆனால் அங்கே எந்த ஒரு நிர்வாகத்தையோ அல்லது உள்ளூராட்சி அமைப்பையோ சிறீலங்காவால் நடாத்த முடியாதுள்ளது. அங்கு மட்டுமல்ல இங்கும்கூட தாம் நினைத்ததை செய்யக்கூடிய ஆற்றல் உள்ளவர்களாக விடுதலைப் புலிகள் உள்ளனர். இந்நிலையில் விடுதலைப் புலிகளுடன் பேசித்தான் ஆகவேண்டும். இதற்கு மூன்றாவது தரப்பு மத்தியத்துவம் மிகத் தேவையான ஒன்றாக உள்ளது. சந்திரிகா வளையல், சந்திரிகா சேலை, விற்று சந்திரிகா அமைதியை ஏற்படுத்துவார் எனத்தம் நம்பிக்கையை வெளிப்படுத்திய தமிழ் மக்களுக்கு சந்திரிகாவால் எதையும் செய்யமுடியாது போயிற்று. இந்தியப் படைகளின் வரவை வரவேற்ற சந்திரிகா இன்று மட்டும் மூன்றாம் தரப்பு மத்தியத்துவத்தை வேண்டா மென்பதேன்? கதிர்காமர் ஒரு தமிழனாக இருந்தும் கூட அவருக்கு 26 அப்பாவித் தமிழர்கள் அநியாயமாக புதுக்குடியிருப்பில் குண்டு வீச்சுக்கு பலியானது தெரியவில்லையா. அநியாயமாக தமிழர்களும் சிங்களவர்களும் பலியாவதை தடுத்து நிறுத்தாது நியூயோர்க்கில் உல்லாசக் ஹோட்டல்களில் நின்று கதிர்காமர் மூன்றாம்தரப்பு மத்தியத்துவத்தை வேண்டாமென்கின்றார். அவருக்கு பாதுகாப்பானவகையில் அவரது வீட்டைச்சுற்றி பங்கர்கள் வெட்டி அவரது வீட்டைசுற்றி தெருக்கள் எல்லாம் மூடப்பட்டுள்ளன. கொழும்பிலுள்ள தமிழ் குழுக்களுடன் பேசிப் பயன் இல்லை. ஏனெனில் அவர்கள் ஒளிந்து வாழ்பவர்கள். தமிழீழ விடுதலைப் புலிகளுடனே அவர்கள் விரும்புகின்றவாறு மூன்றாம்தரப்பு மத்தியத்துவத்தினுடன் பேசுவதன் மூலமே எல்லாருக்கும் ஏற்புடைய தீர்வை கொண்டு வந்து அமைதியை நிலைநாட்ட முடியும்.' இவ்வாறு அனுரா பண்டாரநாயக்காவே சந்திரிகா அரசின் அரசியல் யதார்த்தமற்ற போக்கை கண்டித்துள்ளார். இந்தப் பாராளுமன்ற உரை சந்திரிகா அரசு செய்யமுயலும் அர்த்தமற்ற கால இழுத்தடிப்புக்களின் தன்மையை உலகிற்கு இனங் காட்டியுள்ளது.

சந்திரிகாவைப் பொறுத்தவரை இராணுவத் தீர்வே அவரின் இலக்கு. அதனை தடுத்து தமிழ் மக்களைக் காக்கும் பணி விடுதலை கிடைக்கும் வரை விடுதலைப் புலிகளின் தலையாய பணியாக தொடர்ந்து கொண்டே இருக்கும். இதற்கு இவ்வார உதாரணமாக அம்பகாமம் களமுனையில் விடுதலைப் புலிகள் சிங்களப்படைகளின் 'நீர்சிந்துதல்' எனும் இராணுவக்குறியீடுடன் இடம் பெற்ற தரை நகர்வு முயற்சியை மீண்டும் முறியடித்து வெற்றிவாகை சூடியுள்ளனர்.

சந்திரிகா 1995இல் பேச்சுவார்த்தையினை முறிவடைய வைத்ததன்மூலம் அன்றுமுதல் இன்றுவரை இலங்கைத்தீவில் ஏற்பட்ட அனைத்து அனர்த்தங்களுக்கும் அவலங்களுக்கும் பொறுப்பாகின்றார். அவரது ஆட்சி முடிவடைய உள்ள இந்த இறுதிக் காலத்திலாவது சந்திரிகா யதார்த்த தன்மைகளை உணர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் பலத்தைக் குறைத்து மதிப்பிடாது மூன்றாம்தரப்பு மத்தியத்துவத்துடனான பேச்சுவார்த்தை ஒன்றை சிந்தித்து செயற்படுவாரானால் அதுவே இலங்கைத் தீவில் உள்ள அனைத்து மக்களதும் அமைதிக்கும் பாதுகாப்புக்கும் ஏற்ற செயற்பாடாக அமையும்.

அதே வேளை அமைதியைதேட விருப்பற்றவராக போர்வெறி கொண்டு இனஅழிப்பு இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் சந்திரிகாவின் சிறீலங்கா ஆக்கிரமிப்பு அரசாங்கத்திடம் இருந்து எமது மக்களையும் தாயகத்தையும் காக்கும் விடுதலைப் புலிகளின் புனிதப் பணிக்கு புலம்பெயர் தமிழர்களாகிய நாங்கள் எங்களாலான அனைத்து உதவிகளையும் செய்வதன் மூலம் சத்தியம் தர்மம் எம் மண்ணில் நிலைபெற்று எமது மக்களுக்கு பாதுகாப்பான அமைதி விரைவில் தோன்ற வழிசெய்வோமாக.

◆ ◆ ◆




AUSTRALIA
TCC
P O Box 375,
Preston,
Victoria 3072.

CANADA
WTM
64 Eaton Avenue,
Toronto,
Ontario M4J 2Z5.

DENMARK
LTTE
P.O.Box 47,
7400 Herning.

FRANCE
TCC
341 Rue Des
Pyrenees,
75020 Paris.

GERMANY
TCG
Postfach 340251,
51624 Gummersbach.

ITALY
TCC
Via Vinsenzo Di Pavia No14,
90138 Palermo.

NETHERLANDS
TCC
P.O.Box 18600,
2502 EP Den Haag.

NORWAY
TCC
P.O.BOX 1699 Vika,
0110 Oslo.

SWITZERLAND
WTTC
Joses Str - 110,
8005 Zurich.

SWEDEN
TCC
Glomminge Grand-25,
3rd Floor,
16362 Spanga.

UNITED KINGDOM
UTO
Eelam House,
202 Long Lane,
London SE1 4QB.

U.S.A
W.T.C.C
170-10 Cedarcroft Road
Suite 1-L, Jamaica
New York 11432.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புதைகுழி விசாரணைகள் அம்பலமாகின்றது


## – தன்னைத் தானே விசாரித்து சுற்றவாளியாகியுள்ள சந்திரிகா அரசு –

செம்மணியில் எவ்வித பாரிய இரகசியப் புதைகுழிகளும் இல்லை என சிறீலங்கா சட்டமா அதிபர் பணிமனை உலகிற்கு அறிவித்துள்ளது. இதனை உள்நாட்டு, வெளிநாட்டு நிபுணர்கள் ஏற்றுக்கொண்டு விட்டதாகவும் பணிமனையால் அறிவிக்கப்பட்டுள்ளது. இது பற்றிய அறிக்கையை சட்டமா அதிபர் பணிமனை யாழ் குடாவில் உள்ள சிறீலங்கா ஆக்கிரமிப்பு நீதிமன்றத்தின் முன்சமர்ப்பித்துள்ளது.

சிங்கள இராணுவப் பேச்சாளர் தென்னக்கோன் இதே அறிவிப்பை தனது வாரந்த இராணுவ அறிவிப்புக்களுக்கான செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார். இவ் அறிவிப்புக்கள் மூலம் செம்மணி தொடர்பான விசாரணைகளை சிங்கள அரசு 'வெற்றிகரமான' முடிவுக்குக் கொண்டு வருகின்றது. இராணுவம் எதுவிதமான திட்டமிட்ட இரகசிய புதைகுழி விடயங்களிலும் ஈடுபடவில்லை என கூறுவதற்கான ஆதாரம் தயாரிக்கப்பட்டுவிட்டது.

யாழ்.குடா நாட்டை ஆக்கிரமித்த சிங்களப் படைகள் பலரை படுகொலை செய்து இரகசியமாகப் புதைத்தமை தொடர்பான அனைத்துலக குற்றச்சாட்டுக்களில் இருந்துதப்பிப்பதற்காக நடாத்தப்பட்டு வந்த செம்மணி புதைகுழிகள் தொடர்பான விசாரணைகள் இவ் அறிவிப்புக்கள் மூலம் மட்டுப்படுத்தப்பட்டு தன் உண்மையான நோக்கத்தை வெளிக்காட்டியுள்ளது.

செம்மணி புதைகுழிகள் தொடர்பாக சர்வதேச விசாரணைகளை நிராகரித்த சந்திரிகா அரசு நீண்ட இழுத்தடிப்புக்களின் பின்னணியில் ஒரு போலி விசாரணையை நடாத்தியது. முன்னாள் கோப்ரல் சோமரட்ண ராஜபக்ஷவின் வாக்கு மூலங்களின் அடிப்படையில் 24 சந்தேகத்திற்குரிய இடங்களை தோண்டிய சிங்கள ஆக்கிரமிப்பு நீதிமன்றம் 15 எலும்புக் கூடுகளை மட்டும் 'கண்டு பிடித்தது' இவ் 24 இடங்களிலும் குறைந்தது 100 உடல்கள் புதைக்கப்பட்டிருக்கலாம் என பார்வையாளர்களாக கலந்துகொண்ட சர்வதேச நிபுணர்கள் கருதுவதாக வோய்ஸ் ஒவ் அமெரிக்காவின் செய்தி நிருபர் கூறியிருந்தார். 13 எலும்புக்கூடுகள் 7 புதைகுழிகளில் இருந்துமீட்கப்பட்டன.



நாதன்

இக் கண்டுபிடிப்புக்களின் அடிப்படையில் யாழ். குடா நாட்டில் பாரிய இரகசியப் புதைகுழிகள் எதுவும் காணப்படவில்லை என சந்திரிகா அரசு அறிவித்துள்ளது. பலநூறு தமிழர்களை இரகசியமாகப் புதைத்த இடங்கள் என முன்னாள கோப்ரல் சோமரட்ண ராஜபக்ஷவினால் சொல்லப்பட்ட குற்றச்சாட்டை இதன் மூலம் நிராகரித்துள்ள சிங்கள ஆக்கிரமிப்பு நிர்வாகம் இராணுவம் எதுவிதமான திட்டமிட்ட இரகசியப் புதைகுழிகளையும் வைத்திருக்கவில்லை என இப்போலி நீதிவிசாரணைகள் மூலம் வெற்றிகரமாக நிரூபிக்க முனைகின்றது. வெறுமனே 15 தமிழர்களை இராணுவத்தினைச் சேர்ந்த கீழ்மட்ட அதிகாரிகள் சிலர் கொன்றுள்ளனர் என்ற கோணத்தில் விசாரணைகள் நடாத்துவதற்கு சட்டமா அதிபர் திணைக்களமும் சிங்கள பொலிஸ் துறையும் முடிவு செய்துள்ளது. கொலை, சட்டவிரோதமாக புதைத்தல், சித்திரவதை என்பன போன்ற சாதாரண கிரிமினல் குற்றச்சாட்டுகளின் கீழ் சில இராணுவத்தினர் மீது விசாரணைகளை நடாத்தி திட்டமிடப்பட்ட படுகொலை என்ற முழு உண்மைகளையும் சிங்கள ஆக்கிரமிப்பு நிர்வாகம் மூடி மறைக்கின்றது.

இப் புதைகுழி விடயத்தில் இன்றைய இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் வீரசூரிய, முன்னணித் தளபதி மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா உட்பட பலர் சம்பந்தப்பட்டிருந்தனர்.

யாழ். குடாவை ஆக்கிரமித்துள்ள சிங்கள தேசம் தான் புரிந்த பெரும் இனப்படுகொலையை தானே விசாரித்து தன்னை சுற்றவாளியாக அறிவிக்க முயல்வதை செம்மணி விசாரணை நாடகம் புலப்படுத்துகின்றது.

■■■

# 'செம்மணி' கவிதை தொகுப்பு

## மண்ணில் புதைந்துபோன தமிழர்களின் அவலம்...
## இருபத்திநான்கு தமிழீழக் கவிஞர்களின் மனக்குமுறலாக...

...அழகிய கிருஷாந்தி
இவளொரு போராளியல்ல
ஆனாலும் அவளை அவர்கள்
பிடித்தனர்.
கைதடி வெளியெல்லாம்
அவள் கதறிய குரல் அலைய
அவளை அவர்கள்
பலமுறை சிதைத்தனர்...

...கொள்ளி எடுத்து வைச்சு
கொப்பன்ரை கையாலே
என்ரை ராசாவுக்கு....
குடமுடைச்சுப் போடலையே.
அள்ளிப் பொடியெடுத்து
அப்பன்ரை கையாலே
என்ரை ராசாத்திக்கு
அந்திரட்டி செய்யலையே...

...உனக்கென்ன பயம்?...
பயந்து பயந்து திரிந்தால்
என்னருகில் ஒரு இடம்
உனக்கும் கிடைக்கலாம்
என்ன பயம்
யாரென இனங்காணப்படாமலே
பூமியினுள் புதைந்தென்ன லாபம்?
இன்னும் தயங்காதே
என்னைப் போல் புதையாதே!...

...நீ நிலாக் காட்டிச் சோறூட்டிய
அந்த விழிகளைத் தேடுவாய்.
இளமையின் பொலீவில் அரும்புவிட்ட
அந்தச் சிறு மீசையைக் காண விளைவாய்.
பூரித்துப் பொங்கி வளரும் அந்த இளம்
தோள்களைப் பார்க்கத் துடிப்பாய்.
எல்லாவற்றுக்கும் மேலாக
அம்மா என்று ஆசையுடன் அழைக்கும் அந்த
நாவைத் தேடுவாய்.
தாயே! - எதையுமே அங்கே உனக்கு என்னால்
காட்ட முடியாது...

...வெண்புறாவின் இறக்கை
மறைப்பில்
சூரியன் இருண்டுகிடக்க
அதன் அலகுக் கூரும்
நகங்களின் கோரமும்
நரகத்தின் பயங்கரத்தைச்
சுமந்த அதன் முகமும்
சாவிலுங் கொடியதாய்...

...ஆட்காட்டியோ தன்சிறகொடுக்கி
அதையெல்லாம் பார்த்திருந்தது.
வயற்கரையில்
அதன் முதிய வளைவீடுகளில்
மூன்று குஞ்சுகளும்
குஞ்சாகும் இரண்டு முட்டைகளும்
அந்தப் புதைகுழிகளில் மூடுண்டன.
நண்டின் வளைகள் மீதும்
நாலுகுழிகள்...

...'தாய்மை' பேசிய
பெண்ணரசியின்
கொலைக்கரங்கள் மூடிய
புதைகுழிகள் எத்தனையோ?
உறவுகளின் நெடிய
மூச்சுகள் சுட்டெரிக்க
விழிவழிகின்ற கண்ணீர்த்துளிகள்
பெரும் ஊழித்தீயாய் மாற
மீண்டும் எழும்
புதைத்தவரின் புதைகுழி...

...நல்ல நிசப்தம்
இடையிடையே பூட்ஸ்காலின் சத்தமும்
பேய்க்காற்றின் இரைச்சல் கேட்டாலும்
தூங்குதற்கு இந்த அமைதி போதும்.
புதையுண்ட எனது சனங்களுக்கு
யாரும் காடாத்திக் கொட்டவில்லை...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மத்தியத்துவம் இறைமையை பாதிக்கும் ?

## – அமைச்சர் கதிர்காமர் விளக்கம் –

தமது அரசுக்கும் புலிகளுக்கும் இடையேயான இணக்கப் பேச்சுக்களுக்கு உதவ 16 நாடுகள் தயாராக இருப்பதாக சிறீலங்கா வெளிவிவகார அமைச்சர் கூறியுள்ளார். ஆனால் மூன்றாம்தரப்பு மத்தியத்துவம் ஊடாக தனது அரசு பேச்சுவார்த்தைகளுக்கு செல்லாது எனவும் இறைமையுள்ள தமது நாட்டிற்கு மூன்றாம்தரப்பு மத்தியத்துவத்தை ஏற்பது சிரமமான விடயம் எனவும் கதிர்காமர் விளக்கம் கூறியுள்ளார்.



கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில ஏடொன்றிற்கு பேட்டியளித்த கதிர்காமர் ஜநா சபையின் நடவடிக்கைகளையும் காரசாரமாக மீண்டும் விமர்சித்திருந்தார். புதுக்குடியிருப்பு குண்டுவீச்சு தொடர்பாக அறிக்கை விடுவதற்கு ஐ.நாவின் கொழும்புப் பணிமனைக்கு உரிமை இல்லை எனவும் அம்பாறை சம்பவத்தில் புலிகளை காரசாரமாகக் கண்டித்து ஐ.நா பணிமனை அறிக்கை விடுக்காதது ஏன் எனவும் கேட்டுள்ளார். இராஜதந்திர நுட்பம் தெரியாத கீழ்நிலை அதிகாரிகள் சிலர் இவ்வாறு அறிக்கை விடுவதாக குற்றம்சாட்டியவர் தாம் தமிழ் சிறுவர்களை காப்பாற்றுமாறு ஐ.நா பொதுச்சபையில் பேசும் போது கேட்டதாக கூறியுள்ளார்.

இதே வேளையில் கதிர்காமரை முட்டாள் என ஐ.தே.க தலைவர்களில் ஒருவரான அனுரா பண்டாரநாயக்க வர்ணித்துள்ளார். மூன்றாம்தரப்புப் பேச்சுக்களை நியூயோர்க்கில் நின்று விமர்சித்த கதிர்காமரை பதவியைவிட்டு நீக்கவேண்டும் எனக்கோரிய அனுரா உயர்பாதுகாப்புடன் வசதியாக கதிர்காமர் வாழ்ந்து கொண்டிருக்க அப்பாவி சிங்களவர்கள் போரில் இறப்பதாக கூறியுள்ளார்.

# இறைமையை காரணம்காட்ட முடியாது !

## –சென்னையில் வைகோ –



மக்கள் மீது நடாத்தப்படும் மனித உரிமை மீறல்களை தடுக்க முற்படும்போது அந்நாட்டின் இறைமையை காட்டி மறுக்கும் நிலை இருந்துவந்தது. இனி அந்தக் காரணத்தைக் காட்டக்கூடாது என ஐ.நா சபையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச்செயலாளரும் இந்திய பாராளுமன்ற உறுப்பினருமான வைகோ தெரிவித்துள்ளர். சென்னையில் இடம் பெற்ற 1999 தேர்தல் ஒரு கண்ணோட்டம் எனும் கலந்துரையாடலில் உரையாற்றிய அவர் மாறுபட்ட அணுகுமுறைகளை ஐ,நா கையாள்கின்றது எனத் தெரிவித்தார். கிழக்குத் தீமோர், கொசோவோ போன்ற நாடுகளின் பிரச்சனையில் தலையிட்டு மனித உரிமைகளை பாதுகாக்க ஐ.நா தலையிட்டது. அதே போன்று இலங்கை இனப் பிரச்சனையிலும் தலையிட வேண்டும் எனக் கோரிய வைகோ, இலங்கை இனப் பிரச்சினை தொடர்பாக தக்க நேரத்தில் பிரதமரிடம் எனது கருத்தைத் தெரிவிப்பேன் எனவும் அவர் கூறியுள்ளார்.

# கழுத்திலே நகம் பதித்திருக்கிறது

நசுக்கப்பட்ட காயங்களோடு
நொருங்கிப் போன எலும்புகள்
வேதனைகள் அடுப்பு மூட்டின
இரவுக்குள் சூடேற்ற
விளக்கொளிரும் நேரம்
பிடுங்கி எறியப்பட்டிருந்தோம்
சிங்கத்தின் கொலை
நகங்கள்
முதுகைப் பிராண்டி,
குருதியைமுகர்ந்த போது
பொறிக்கிடங்கில்
வீழ்ந்திருந்தது
கொலைவலயத்திலிருந்து...
விரல் நுணியில் தப்பித்தோம்
இப்போது
நெஞ்சிலே ஏறிமிதித்து
கழுத்திலே நகம்
பதித்திருக்கின்றது
திணறலான சுவாசிப்புக்களால்
எங்கள் ஆறாவடுக்கள்
ஆழப்படுத்தப்பட்டு விட்டன
நீட்டி நிமிர்ந்து நிம்மதியாய்
உறங்கத்தான் வழியில்லை
காட்டுக்குள் குடிபுகுந்தோம்
விட்டெறிந்த தட்டுக்களுள்
வெறுமையாய்
வயிற்றில் அடிக்கின்றன
வெட்டு என்ற பெயர் சுமந்து
விழி பிதுங்க குழிபறிக்கின்றன
ஊழியின் தாண்டவமாய்

மயிலை தர்மராஜ

# குறு(அ)ம்புகள்..

## பத்தாம் மாதத்து சந்திரிகா..

### முதல் வாரம்..

அடுத்த ஆண்டுக்கான பாதுகாப்புச் செலவினத்தை அதிகரித்து அடுத்த ஆண்டை போராண்டாக ஆரம்பிக்க உறுதிபூண்டார்.

### இரண்டாம் வாரம்..

சீதுவையில் விஜயகுமாரதுங்கா ஞாபகார்த்த வைத்தியசாலையைத் திறந்து வைத்துப் பேசிய அம்மையார். இனப்பிரச்சினையைத் தீர்க்க ஐந்துவருடங்களாக பாடுபட்டதாகவும், தற்போது பிரச்சினையை ஓரளவு இனங்கண்டுவிட்டதாகவும் தெரிவித்ததுடன், யுத்தத்தை நிறுத்தி பிரச்சினைகளைத் தீர்க்கப்போவதாக அறிவித்தார்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு விடுதலைப் புலிகளுடன் பேச, ஐக்கிய தேசியக்கட்சி சில உத்தரவாதங்களைத் தரவேண்டும் எனக்கோரி, எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவிற்கு கடிதம் எழுதினார்.

### மூன்றாம் வாரம்..

இந்து பத்திரிகைக்கு அளித்த பேட்டியில், விடுதலைப் புலிகளுடன் பேசும் எண்ணத்தை கைவிட்டாகிவிட்டதென்றார். நீலன் திருச்செல்வம் கொல்லப்பட்டதுடன், பேச்சுவார்த்தை எண்ணத்தை தற்போதைக்கு கைவிட்டுவிட்டதாக அவர் தெரிவித்திருந்தார்.

***அடுத்த வாரம் என்னவோ..?***

## அபகீர்த்தியும் ஈ.பி.டி.பியும்..

ஈ.பி.டி.பி. அண்மையில், சிங்கள வாராந்தப் பத்திரிகையொன்றுக்கு எதிராக நட்டஈடுகோரி கடிதம் அனுப்பியுள்ளது. விடுதலைப் புலிகளுடன், ஈ.பி.டி.பி இரகசியப் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளதாகவும், முதல்கட்டப் பேச்சு முடிவடைந்துவிட்டதாகவும் அப்பத்திரிகை எழுதிவிட்டதாக குற்றஞ்சாட்டியே வழக்குத்தாக்கல் செய்வதற்கு முன்னோடியாக, மேற்படி பத்திரிகை நிறுவனத்திற்கு ஈ.பி.டி.பி சார்பில், சட்டத்தரணி ஒருவரால் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. ஈ.பி.டி.பி கோரியுள்ள நட்டஈட்டுத் தொகை எவ்வளவு தெரியுமா...? ஐம்பது மில்லியன் ரூபாய்கள்.

அது சரி.. எதற்கு இந்த நட்டஈட்டுத்தொகை...?

இந்தச் செய்தியால் தமது அரசியல் வளர்ச்சிக்கு அபகீர்த்தியும்.. கெடுதலும் ஏற்பட்டுவிட்டதாம்.. அதனாலேயே இந்த நட்டஈடாம்..

***ஈ.பி.டி.பி யின் அரசியல் என்பது என்னவோ..?***

## ஐ.தே.க யும் போரியல் பார்வையும்..

கடந்த ஐந்துவருடத்தில், பன்னீராயிரத்துக்கும் மேற்பட்ட படையினர் பலியாகியுள்ளனர் எனத் தெரிவிக்கின்றார் ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் காமினி அத்துக்கொரள. விடுதலைப் புலிகளுடன் நடத்தப்பட்ட போர் தோல்விகண்டுள்ளதாக அவர் தெரிவிக்கின்றார். அரசாங்கம் தன்குறுகிய இலாபங்களுக்காக, ஒருங்காகத் திட்டமிடாது போர் நடத்துவதாலேயே இத்தோல்விகள் என அவர் தெரிவிக்கின்றார்.

***நன்கு திட்டமிட்டு நடத்தினால்.. உங்களுக்கு வெற்றிதானா..?***

## சரியானபோட்டி..

நியூயோர்க்கில் இருந்தபடி, லக்ஸ்மன் கதிர்காமர், ஐக்கியநாடுகள் சபையின் செயற்பாடுகள் தொடர்பாக, நுளம்புக்கதைகள் சொன்னாரல்லவா. அதற்கு சந்திரிகாவின் தம்பியார் அநுராபண்டாரநாயக்காவோ, கதிர்காமர் ஒரு முட்டாள் எனத் திட்டித்தீர்த்துள்ளார். வெளிவிவகார அமைச்சருக்குரிய அறிவு அவரிடம் இல்லை அதனால் அவரை மாற்றவேண்டும் என பரிந்துரைத்துள்ளார்.

இதற்கு கதிர்காமர் என்ன கூறியிருக்கின்றார் என்றால், அமெரிக்காவில் தங்கியிருந்துவிட்டு அவ்வப்போது விடுமுறை கழிக்க வருவதுபோல், சிறீலங்காவிற்குவரும் அநுராபண்டாரநாயக்காவிற்கு உள்ளுர் அரசியல் தெரியாது என, நாக்கு வழித்துள்ளார்.

***இருவரின் கூற்றிலும் எது சரியாக இருக்கும்..? இரண்டுமேயா..?***

## வடமிழுக்கும் ஈ.பி.ஆர்.எல்.எப்.

இலங்கையில் நடக்கும் யுத்தத்தால், தினம்தினம் மரணங்கள் நிகழ்வதா சுரேஸ்பிரேமச்சந்திரன் அறிந்து கூறியிருக்கின்றார். இப்படியே, யுத்தம் தொடருமாக இருந்தால், தமிழினம் அழிந்துபோய்விடும் என, அவர் கண்டுபிடித்துத் தெரிவித்திருக்கின்றார். அதனால் போரை நிறுத்தி, அரசாங்கத்தை பேச்சுவார்த்தை மேசைக்கு இழுத்துவரவேண்டும் எனக் கூறுகின்றார்.

***தேரை இழுப்பதுபோல் வடம்கட்டியிழுத்தால்.. சரிப்படுமா..?***



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பிரதான சிங்களக் கட்சிகளின்....



# அரசியல் பந்தாட்டம்!

## பார்வையாளர் சிங்களவர்கள்; பந்தாடப்படுவோர் தமிழர்கள்.

சிறீலங்காவின் இரண்டு பிரதான சிங்களக்கட்சிகளும் தற்போது பந்துவிளையாட்டில் ஈடுபட்டுள்ளன. இந்த அரசியல் பந்துவிளையாட்டில் யார் வெல்லுகின்றார்களோ அவர்களுக்கே தேர்தலில் சிங்கள மக்கள் சாதகமாக வாக்களிப்பார்கள் என்ற நம்பிக்கையில் இரண்டு பிரதான கட்சிகளும் ஆர்வத்துடனும் ஈடுபாட்டுடனும் லாவகமாக ஆட்டத்தில் ஈடுபட்டுள்ளன.

ஆயிரத்து தொளாயிரத்து தொன்னூற்று நான்கில், மக்களுக்கு வாக்களித்த ஐந்து பிரச்சினைகளில் நான்கைத் தீர்த்து வைத்துவிட்டதாக சந்திரிகா அறிவித்துவிட்டார். உண்மையில் அந்த நான்கும் தீர்க்கப்பட்டுவிட்டனவா என்பதை சிங்கள மக்கள்தான் தெரிவிக்க வேண்டும்.

கடந்த பதினைந்தாம் திகதி, இரத்தினபுரியில் நடந்த, பொதுசன ஐக்கிய முன்னணியின் வைபவம் ஒன்றில் சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா பகிரங்கமாக இந்த அறிவித்தல்களை விடுத்தார்.

மக்கள் பீதியின்றி வாழும் நிலையை உருவாக்குவோம் எனக்கூறினோம். அதனை இன்று செய்துள்ளோம். அதேபோன்று, மக்களுக்கான பேச்சுச் சுதந்திரத்தை மீட்டுத்தந்துள்ளோம். சீர்கெட்ட பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புதல் போன்ற வாக்குறுதிகளையும் நிறைவேற்றிவிட்டோம்.

ஆக, மீதமாக இருப்பது இனப்பிரச்சினைத் தீர்வு மாத்திரமே.

இவ்வாறு, சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா அங்கு தெரிவித்திருந்தார். இது தமிழ் மக்களுக்கு சொல்லப்பட்டதல்ல என்பதில் தமிழ் மக்கள் தெளிவாக இருக்கின்றார்கள். சிங்களப்படையின் பழிவாங்கல் தாக்குதல்களில் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு உயிர்காக்க ஓடுவதும், அரச பயங்கரவாதத்தில் பலியாவதுமாக, ஆக்கிரமிப்புக்குள்ளாகாத பகுதிகளில் தமிழர்கள் அவலத்துடன் வாழ்கின்றனர். அதேபோன்று, எப்போது புலிகள் என்ற போர்வையில் சுடுவார்கள், எப்போது கைது செய்வார்கள், எப்போது சிறையில் அடைப்பார்கள் என்ற அச்சத்திலேயே கொழும்பு வாழ் தமிழர்களும், இராணுவத்தின் ஆக்கிரமிப்பில் உள்ள பகுதிகளில் வாழும் தமிழர்களும் தினம் அச்சத்துடனேயே நாட்களை எதிர்கொள்கின்றனர். ஆக, பீதியின்றி வாழும் நிலையை உருவாக்கிவிட்டதாகச் சொல்லப்பட்டது சிங்களமக்களுக்கே.

வங்காலையில் சிறீலங்காப் பொலிஸார் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதிற்கு பழிவாங்கும் வகையில், சிறீலங்காப்படையினரால், வங்காலையில் தமிழ் மக்களின் வீடுகள், வாடிகள், வள்ளங்கள் எரிக்கப்பட்ட காடைத்தனங்களைக் கண்டித்துக் கருத்துக்கூறியமைக்காக, கடந்த 19ஆம் திகதி, புனிதஅன்னம்மாள் தேவாலயப் பங்குத்தந்தை எச்சரிக்கப்பட்டுள்ளார். அவர்மீது தாக்குதல் நடத்தவும், சிங்களப்படையினர் முயன்றுள்ளனர்.

அதேபோன்று, கொழும்பில் நடைபெறும் வகைதொகையற்ற காரணமற்ற கைதுகள் குறித்து, தனது கருத்தை இராணுவத்திற்கு தெரிவித்தமைக்காக, தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன் மீது பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. தமது கடமையை மேற்கொள்ள முடியாதபடி தடைசெய்தார் என்பதுடன், விடுதலைப் புலிகள் தப்பிச் செல்ல காரணமாகிவிட்டார் என, இராணுவதரப்பால் முறையிடப்பட்டுள்ளது. தமிழ்மக்களின் துன்பதுயரங்கள் குறித்து கட்டுரை வரைந்தமைக்காக தமிழ் செய்தியாளர்கள் இருவர் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டிருக்கின்றனர். இப்படியான நிலையில், சாதாரண தமிழ்மக்களின் கருத்துச் சுதந்திரம் குறித்து கேட்கவே வேண்டியதில்லை.

> **வங்காலையில் சிறீலங்காப் பொலிஸார்மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதிற்கு பழிவாங்கும் வகையில், சிறீலங்காப்படையினரால், வங்காலையில் தமிழ்மக்களின் வீடுகள், வாடிகள், வள்ளங்கள் எரிக்கப்பட்ட காடைத்தனங்களைக் கண்டித்துக் கருத்துக்கூறியமைக்காக, கடந்த 19ஆம் திகதி, புனிதஅன்னம்மாள் தேவாலயப் பங்குத்தந்தை எச்சரிக்கப்பட்டுள்ளார்.**

ஆக, சந்திரிகாவால் தீர்த்துவைக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டதும் சிங்களமக்களுக்கான பேச்சுச் சுதந்திரமே.

தொடர்ச்சியான இராணுவ நடவடிக்கைகளால், தொழில் துறையிழந்து வளமான பொருளாதார வாழ்வை இழந்து, காடுகளிலும், அகதி முகாம்களிலும் தஞ்சமடைந்துள்ள தமிழ்மக்கள், நிவாரணங்களுக்கு கையேந்தும் நிலையிலேயே சிறீலங்கா அரசு அவர்களை ஆக்கிவைத்திருக்கின்றது.

ஆக, தமிழர்களின் பொருளாதாரம் சீர்ப்படுத்தப்படவில்லை. மாறாக சீர்குலைக்கப்பட்டுள்ளது.

வாக்குறுதிகள் நிறைவேற்றம் குறித்த சந்திரிகாவின் அறிவித்தல்கள் சிங்களமக்களோடு சம்பந்தப்பட்ட விவகாரம் என்பதால் அதனை அப்படியே விட்டுவிடலாம்.

ஆனால், இனப்பிரச்சினைத் தீர்வுவிடயத்தில் அதன் வாய்ச்சவாடல்கள், ஆராயப்படவேண்டியதொன்றே. யார் எதிர்த்தாலும், ஆதரித்தாலும் தீர்வுப்பொதியை அமுல்ப்படுத்துவேன் என்று அன்று முழங்கிய சந்திரிகா, அந்தத் தீர்வுப் பொதியை வைத்துக்கொண்டே, அடுத்த தேர்தலுக்கான பிரச்சாரத்தில் தற்போது இறங்கியுள்ளார். தீர்வுப்பொதியை அமுல்ப்படுத்த, இன்னமும் பதினாறு பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு தேவை. அதை ஐக்கிய தேசியக் கட்சி தர மறுக்கிறது. அதனால் பிரச்சினையைத் தீர்க்கமுடியாமல் உள்ளது. இவ்வாறு ஆதங்கப்பட்டுள்ள சந்திரிகா, அடுத்த தேர்தலில், மூன்றில் இரண்டு பெரும்பான்மையைத் தருவீர்களானால், மூன்று மாதத்திற்குள் இனப்பிரச்சினையைத் தீர்ப்பேன் எனக் கூறியுள்ளார்.

இந்தத் தேர்தல்க்கால பிரச்சாரப் பூச்சுற்றல்கள் ஒருபுறம் இருக்க, எதிர்கட்சியின் இனப்பிரச்சினைதொடர்பான பிரச்சாரத்திற்கு, ஒரு தலையடி கொடுக்கும் விதமாய், எதிர்க்கட்சிக்கு ஒரு பகிரங்கக் கடிதத்தையும் அனுப்பிவைத்தார் சந்திரிகா. சந்திரிகாவின் முன்னைய பாணியில் ஐக்கிய தேசியக் கட்சி நடத்திவரும் பிரச்சாரங்கள், சந்திரிகாவின் அரசியல் இராணுவ நகர்வுகளுக்கு குந்தகமாயும் இடைஞ்சலாகவும் இருந்துவருவதால், இந்தத் தலையடி. அழிவுகளை ஏற்படுத்திவரும் யுத்தத்தை நிறுத்தி, விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி பிரச்சாரம் செய்துவருகின்றது.

இராணுவம் பரவிவிரவி விடுதலைப் புலிகளிடம் பெரும் தோல்விகளைச் சதா சந்தித்துவரும் நிலையில், பெரும் இராணுவ வெற்றியொன்றுக்கு முன்னராக பேச்சுவார்த்தை ஒன்றை ஆரம்பித்தால், அடுத்ததேர்தலில் சந்திரிகாவிற்கு தோல்வி ஏற்படும் எனக்கருதி, ஐக்கிய தேசியக் கட்சி பிரச்சாரம் செய்கின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி தன்னைக் கவிழ்க்க சந்தர்ப்பம் தேடுகின்றது என்பதை நன்கு புரிந்துவைத்துள்ள சந்திரிகா, இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஒத்துழைப்பு நல்கவேண்டும் எனவும், விடுதலைப் புலிகளுடன் தான் பேசுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி சில உத்தரவாதங்களைத் தரவேண்டும் எனவும் குறிப்பிட்டு, இதுவிடயத்தில் அதன் வாயை அடைக்க முயன்றுள்ளார்.

> *ஐக்கிய தேசியக்கட்சி தன்னைக் கவிழ்க்க சந்தர்ப்பம் தேடுகின்றது என்பதை நன்கு புரிந்துவைத்துள்ள சந்திரிகா, இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஒத்துழைப்பு நல்கவேண்டும் எனவும், விடுதலைப் புலிகளுடன் தான் பேசுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி சில உத்தரவாதங்களைத் தரவேண்டும் எனவும் குறிப்பிட்டு, இதுவிடயத்தில் அதன் வாயை அடைக்க முயன்றுள்ளார்.*

எனினும், சந்திரிகா அரசு, விடுதலைப் புலிகளுடன் பேச முன்வரவில்லை என்பதை, சந்திரிகாவின் இந்துப் பத்திரிகைக்கான பேட்டி வெளிப்படுத்தியது. நீலன் கொல்லப்பட்டதன்பின் சமாதான பேச்சுவார்த்தை முயற்சிகளை பிற்போட்டாகிவிட்டதாக சந்திரிகா இந்துவிற்கு தெரிவித்துள்ளார். அத்துடன், கடந்த மாதமும், இந்த மாதமும் வன்னியில் மேற்கொள்ளப்பட்ட இரு இராணுவ நடவடிக்கைகளும், சந்திரிகா அடுத்த தேர்தலுக்கு இராணுவ வெற்றியொன்றை எதிர்பார்க்கின்றார் என்பது வெளிப்படுகின்றன. சனவரி மாதம் சனாதிபதித் தேர்தலை நடத்தலாம் என சந்திரிகா திட்டமிட்டிருப்பதும், அதற்கு முன்னராக இராணுவ வெற்றியொன்றுக்கு அவர் மிகவும் ஆவலாய் காத்திருக்கின்றார் என்பதையும் ஐக்கிய தேசியக் கட்சியும் அறிந்திருக்கும்போல்.

அதனால்தான் தற்போது, அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா தன்னை நோக்கி வந்த பந்தை வெகு லாவகமாக சந்திரிகா பக்கம் திருப்பிவிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளுடன் அரசு பேச்சுவார்த்தையை மேற்கொண்டால், ஐக்கிய தேசியக் கட்சி அதற்கு ஒத்துழைப்பு வழங்கும் என, ரணில் விக்கிரமசிங்கா அறிவித்துள்ளார்.

**சுப்பு**

www.tamilarangam.net



# தியன் - பியன் - பூ

# பொதுமக்களின் பங்குபற்றலில் வெற்றிபெற்ற வரலாற்றுச் சமர்

தியன் - பியன் - பூ சமர் நடந்து 45 வருடங்கள் முடிந்து விட்டன. இது ஒரு முற்றுகைச் சமர். சமரின் தலைவிதியை தீர்மானித்தது, அந்தச் சமருக்கான வழங்கல்பணி (Logistical Support). இதில் வியட்னாமியரே மேன்நிலையில் இருந்தனர். வியட்னாமின் சாதாரண மக்களே இந்த வழங்கற் பணியை திறம்படச் செய்து - சமரின் வெற்றிக்கு வழிகோலினர். இந்த வகையில் உலகப் போர் வரலாற்றில் தியன் - பியன் - பூ முற்றுகைச்சமர் ஒரு பிரத்தியேக இடத்தைப் பிடித்துள்ளது. இந்தச் சமருக்காக ஐம்பதினாயிரம் மக்கள் திரட்டப்பட்டனர். இவர்கள் 1250 கி.மீற்றர்கள் நீள வழங்கல் பாதையில் சுமைதூக்கல் - பாதைசமைத்தல் - உணவு சேகரித்து பதனிடல் - என பல்வேறு பணிகளைச் செய்தனர். சைக்கிள்கள் மூலம் பாரம் தூக்கியவர்களை இரும்புக்குதிரைப்படை அணிகள் என்றும் ஆட்லறிகளை கயிறு கட்டி இழுத்து - மலைப் பாங்கான தளச் சுற்றாடலுக்கு நகர்த்தியவர்களை உருக்கு யானைகள் என்றும் பெயரிட்டழைத்தனர்.

வியட்னாம் நாடானது தனது விடுதலையைப் பெறுவதற்காக இரண்டு பெரும் வல்லரசுகளுடன் (பிரான்ஸ் - அமெரிக்கா) 30 வருடகாலம் இடைவிடாது போர்புரிந்து - வெற்றிபெற்ற வரலாற்றுப்புகழைக் கொண்டது. வியட்னாம் மீதான பிரான்சியப் படைகளின் ஆக்கிரமிப்பிற்கு சாவுமணி அடித்த சமராக தியன் - பியன் - பூ விளங்குகின்றது. சமரின் உடனடி விளைவுகள் ஒரு சமாதான ஒப்பந்தத்திற்கு இட்டுச் சென்றன. அந்த உடன்படிக்கை பிரான்சியப்படைகளின் வெளியேற்றத்திற்கு வழிகோலியது. இந்தச் சமரில் பங்குகொண்ட ஆட்தொகை விடயத்தில் வியட்னாமியரே மேன்நிலையில் இருந்தனர். இவர்களுக்கு சோவியத்யூனியன் - சீனாவிலிருந்து தாராள ஆயுத உதவிகளும் கிடைத்தன.

எனினும், சமரின் தலைவிதியை தீர்மானித்த மிக முக்கிய காரணியாக வழங்கல் பணியே விளங்கியது. வியட்னாமியரின் தரப்பில் போராளிகளின் நெறிப்படுத்தலில் பொதுமக்களே இந்த அதி முக்கிய இராணுவப் பணியைச் செய்தனர். சிறிய உருவத்தையும் - பெரிய வட்டத் தொப்பியையும் அணிந்தபடி நீளக் காற்சட்டை - மேலங்கியுடன் தோற்றமளித்த இந்த சாதாரண மக்கள் தங்களது உடலை வருத்திச் செய்த ஆச்சரியகரமான உழைப்பு விடுதலைக்காகப் போராடும் மக்கள் இனங்களுக்கு சிறந்தொரு முன்னுதாரணமாக உள்ளது.

தியன் - பியன் - பூ காடுகளால் சூழப்பட்டு தனித்திருந்த ஒரு ஊர். சுமார் நூறு வீடுகளைத் தன்னகத்தே கொண்டிருந்த மலைப்பாங்கான பிரதேசம். இதே வேளை, இராணுவ கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதி.

இங்கே பதினான்காயிரம் பிரான்சியத் துருப்புக்கள் தளம் அமைத்திருந்தனர். இவர்களுக்கான வழங்கல் மார்க்கம் வான்வழியே நடந்தது. வான் போக்குவரத்தின் போய்வரும் தூரம் 875 கி.மீற்றர்கள்.

இதே சமயம், வியட்னாம் போராளிகளுக்கான வழங்கல் பாதையின் போய்வரும் தூரம் சுமார் 1250 கி.மீற்றர்கள் நீள தரைப்பாதை. அதுவும் கரடுமுரடான - காட்டாறுகள் நிறைந்த காட்டுப்பாதை. அயல் நாடுகளான சீனா - லாவோஸ் நாடுகளின் எல்லைகளிலிருந்து இந்தக் காட்டுப்பாதை வழியே போராளிகளின் வழங்கல்கள் வந்தன.

முக்கோண வடிவில் அமைந்த தியன் - பியன் - பூ தளத்தின் ஆகக்கூடிய குறுக்குத் தூரமாக 12 கி.மீற்றர்கள் இருந்தது. இரகசியமான நடவடிக்கைகள் மூலம் போராளிகள் முற்றுகைவலையை தளத்தைச்சூழ விரித்தனர். இது ஒரு திட்டமிட்டப்பட்ட முற்றுகைச் சமர். 55 நாட்கள் தொடர்ந்து நடந்தது. முற்றுகைச்சமரின் உயிர்நாடி வழங்கல்தான்.



தியன் - பியன் - பூ தளத்திலிருந்து சிறிய விமான ஓடுபாதையைப் பயன்படுத்தி பிரான்சியத் துருப்புக்கள் வழங்கல் தேவைகளை ஈடு செய்ய முயன்றன.

ஆனால், வியட்னாம் போராளிகளின் வழங்கல் பணி முற்றுமுழுதாக மனித சக்தியிலேயே தங்கியிருந்தது. இதற்கென ஐம்பதினாயிரம் பேர் திரட்டப்பட்டனர். இதில் இருபதாயிரம் பேர் வழங்கலுக்காக காடுவெட்டி பாதை அமைப்பதிலும் - காட்டாறுகள் மீது மூங்கில் பாலங்கல் கட்டுவதிலும் ஈடுபடுத்தப்பட்டனர். மேலும் இருபதாயிரம் பேர் பதுங்குகுழிகள் அமைத்தல் - வழங்கல் பொருட்களைச் சுமத்தல் - மருத்துவப் பணிபுரிதல் ஆகியவற்றில் அமர்த்தப்பட்டனர். மிகுதி பத்தாயிரம் பேர் சைக்கிள்களுடன் அந்த நீண்ட வழங்கல் பாதை வழியே பொருட்களை - ஆயுதங்களைச் சுமந்து தளம் அருகே கொண்டு வந்து சேர்த்தனர்.

தியன் - பியன் - பூவிலிருந்து 200 கி.மீற்றர்களுக்கு அப்பால் இருந்த கிராமங்களில் இருந்து இந்த வழங்கல் படை திரட்டப்பட்டது. நாளொன்றுக்கு 60 கி.மீற்றர்கள் என்ற இலக்குடன் வழங்கல்படை பிரயாணம் செய்தது.

முற்றுகைச் சமருக்கான முன்முயற்சிகள் நடந்து கொண்டிருந்த போதே இந்தக் காட்டுப்பாதை மீது பிரான்சிய விமானங்கள் குண்டுமழை பொழிந்தன. ஏற்கனவே மோசமான நிலையில் இருந்த பாதை மேலும் மோசமடைந்தது. குண்டு வீச்சில் மூங்கில் பாலங்கள் காற்றுடன் கலந்தன. எனினும் உடனுக்குடன் திருத்த வேலைகளும் - புதிய மூங்கில் பாலங்களை அமைத்தும் வழங்கல் பணிக்கு புத்துயிர் ஊட்டிக்கொண்டேயிருந்தார்கள்.

தியன் - பியன் - பூவின் புவியியல் அமைப்பை ஆராய்ந்த பிரான்சிய படைத் தளபதிக்கு போராளிகளின் முற்றுகை முயற்சி ஒரு முட்டாள்த்தனமான செயலாகவே தென்பட்டது. சாதாரண துப்பாக்கிகளைக் கொண்டு தளத்தைத் தாக்கமுடியாது. எனவே ஆட்லறிகள் - கனரக ஆயுதங்கள் - அவற்றுக்கான எறிகணைகள் - வெடிப்பொருட்கள் கொண்டு வரப்பட வேண்டும். இவைகள் போராளிகளிடம் இல்லை. இவற்றைக் கொண்டு வர வாகனங்கள் இல்லை. இருந்தாலும், வாகனங்கள் வரப்பாதையில்லை. ஆயிரம் கிலோ மீற்றர்களுக்கு அப்பாலே போராளிகளின் பின் தளம் இருந்தது. எனவே, அருகில் பின்தளம் இல்லாமல் ஒரு நீண்ட முற்றுகைச்சமரை நடத்தமுடியாது என்ற இராணுவக் கணிப்புகளைச் செய்த பிரான்சியப் படைத்தரப்பு தளத்தின் பாதுகாப்பு தொடர்பாக உறுதியான நம்பிக்கையுடனேயே இருந்தது.

பிரான்சியப்படைத்தரப்பின் நம்பிக்கைக்கு அதன் ஆயுதபலமும் - சுடுதிறன் மேலாண்மையும் - மேலும் உரமூட்டியது.

தியன் - பியன் - பூவில் 10 ராங்க்குகள் இருந்தன. 105 எம்.எம். ஆட்லறிகள் 28 இருந்தன. மொத்தம் 120 மோட்டார்கள் இருந்தன. இவற்றிற்கான போதியளவு வெடிப்பொருட்கள் இருந்தன. தேவையென்றால் இராணுவ வழங்கலைப்பெற வியட்னாமில் ஒரு சக்திவாய்ந்த பிரான்சிய வான்படையும் இருந்தது.

இதனால் தியன் - பியன் - பூவிற்கு எந்த ஆபத்தும் இல்லையென்று பிரான்ஸ் நம்பியது.

ஆனால், 1250 கிலோ மீற்றர்கள் நீளமான காட்டுப்பாதையால் பேராபத்து ஒன்று தியன் - பியன் - பூவை சூழ்ந்து கொண்டிருந்தது.

சாத்தியமில்லை என்று பிரான்சுப் படைத்தரப்பு முடிவு செய்ததை போராளிகள் சத்தியமாக்கிக் கொண்டிருந்தனர். நம்புதற்கரிய வகையில் மனித சக்தியை ஒருங்கமைத்து - வியட்னாமின் புகழ்பூத்த தளபதி ஜெனரல் ஜியாப் அவர்கள் அந்த ஆபத்தை தியன் - பியன் - பூவிற்குள் வழிநடாத்தி - இராணுவ சாதனை படைத்து - வரலாற்றில் நிலைத்து விட்டார். 'வெல்வதற்காக தாக்கு - வெற்றி நிச்சயம் என்றால் மட்டுமே தாக்கு அல்லது தாக்காதே' என்பது ஜியாப்பின் நிலைப்பாடு.

## இரும்புக்குதிரைப் படையணி:

நீண்டபெரும் காட்டை - வழங்கல் பொருட்களுடன் சுமந்து கடக்கும் வாகனங்களாக மனிதர்களைப் பயன்படுத்த அவர் திட்டமிட்டார். சைக்கிள்கள் பொதி சுமக்கும் வாகனங்கள் ஆகின. ஒவ்வொன்றும் 100 சைக்கிள்களையும் - நூறு ஆட்களையும் கொண்ட சைக்கிள் படையணிகளை உருவாக்கினார். அதற்கு இரும்புக்குதிரைப்படையணி என்று பெயர் சூட்டினார்.

இரும்புக்குதிரை படையணி ஒன்றின் பொறுப்பாளராக பணியாற்றிய சாதாரண சைக்கிள் திருத்துனர் ஒருவர் தனது அனுபவத்தை இவ்வாறு விவரித்துள்ளார்.

'ஒவ்வொரு சைக்கிளும் 200 கிலோ பாரத்தைச் சுமக்க வேண்டும். சைக்கிளை ஓட்டிச் செல்லமுடியாது - உருட்டியே செல்லவேண்டும். இதற்கு வசதியாகச் சில ஏற்பாடுகளைச் செய்தோம்.


(தொடர்ச்சி 7-ம் பக்கம்)




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net







# லெப்.கேணல் நாதன், கப்டன் கஜன் நினைவுகளின் மூன்று வருடங்கள்

இன்று தமிழீழ விடுதலைப் போரின் முக்கிய காலகட்டங்களில் நின்றவாறு இந்த இழப்புகளினை வருடிப் பார்க்கின்றோம்.

அன்று விடுதலைப்போரினை வென்றெடுக்க பலமான விடுதலை இராணுவத்தை கனவுகண்டு உழைத்த உங்களின் வித்துடல் கல்லறைகள் முன்நின்று இன்று நாம் எமது பணிகளை எடைபோட முயல்கின்றோம்.

இன்று புகலிடப் பரப்பில் கூட தமிழர்களின் உரிமைகளை பறித்துவிடும் நாசகார உத்திகளுடன் முன்னிலும் தீவிரமாய் எமது எதிரி.

விடுதலைப்போரை பயங்கரவாதமாக விபரிக்க முயலும் சந்திரிகாவின் நவபேரினவாத நுட்பம்.

எமது எதிர்கால சந்ததியினையே வேரோடு சிதைத்து சிங்கள பேரினவாத பேரரசை உருவாக்க முயலும் எதிரி தமிழ் சிறுவர்களையே தன் பரப்புரைக்கான விடயமாகக் கொண்டு சிறுவர்கள் போருக்குப் போகின்றார்கள் என உலகெங்கும் விசமத்தனம் கயமைத்தனம்.

உலக நிறுவனங்களில் பதவிகளைப் பிடித்தும் செய்தி ஊடகங்களை உபயோகித்தும் தமிழர்களின் விடுதலைப் போரை கொச்சைப்படுத்தும் அதர்மம்.

இவற்றினை எதிர்த்து புகலிடமெங்கும் நாம் கிளைபரப்பி நிற்கின்றோம்.

முன்னிலும் வீச்சாய் தமிழ் தேசியம் விடுதலைக் குரல்களை ஓங்கி ஒலிக்கின்றது.

எம் மீது போடப்படும் அனைத்து தடைகளையும் உடைக்கும் பிரபாகர வைராக்கியத்துடன் எழுந்து நிற்கின்றது தேசியம்.

நீங்கள் ஓடியோடி உழைத்த இலக்குக்களை தாங்கி உலகத் தமிழினம் உழைக்கின்றது. எம்மீது தடை போட முயலும் எதிரியை எதிர்த்து ஆர்பரிக்கின்றது.

போரின் ஆதர பங்களிப்புக்களை மக்கள் அதிகரித்து விடுதலை அவாவை வேண்டி நிற்கின்றனர்.

நாம் வெற்றிபெற தகுதியுள்ள சமூகமாக மாறிவருகின்றோம். விடுதலைக்காக உழைக்கும் பிரஞ்ஞை எமக்கு அந்த தகுதியைத் தருகின்றது.

நீங்கள் கனவு கண்ட இலட்சியத்தை பற்றி நிற்கின்றோம். எம் தலைவன் காட்டும் வழியில் நடக்கின்றோம்.

— நடராஜா

*(6–ம் பக்கத் தொடர்ச்சி)*

## தியன் - பியன் - பூ...

இரண்டு நீள மூங்கில் தடிகளை பயன்படுத்தினோம். ஒன்றைக் 'கான்ரிலில்' வைத்துக்கட்டினோம். மற்றையதைக் கான்ரினுக்குச் சமாந்தரமாக சீற்றின் பின் பகுதியில் வைத்துக் கட்டினோம். அதிகபாரம் ஏற்றவும் - சமநிலையுடன் பிடித்து உருட்டவும் அவை பயன்பட்டன. அத்துடன் சைக்கிளை இலை - குழைகளால் உருமறைப்புச் செய்யவும் மூங்கில் தடிகள் பயன்பட்டன.

பாரம் தாங்காது முதல்நாளே ரயர் ரியூப்புகள் வெடித்தன. இதற்கு மாற்று வழியொன்று செய்தேன். எனது காக்கி 'ரவுசரை' கீழிருந்து கிழித்து - அதைக் கொண்டு ரியூப்பை சுற்றிக் கட்டி அதிக அழுத்தத்தில் காற்றை அடித்தேன். இந்தப் பரிசோதனை பூரண வெற்றியைத் தந்தது எனது அணியினர்க்கு இதை அறிமுகப்படுத்தினேன். அதன் பின்னர் எமது அணியினர் அனைவரினதும் ரவுசர்கள் கட்டைக் காற்சட்டையாகச் சுருங்கியது.

காட்டுப்பாதை தொடர்ச்சியான குண்டு வீச்சுக்கு உள்ளாவதால் நாங்கள் ஒற்றையடிப் பாதைகளூடாகவே பிரயாணம் செய்தோம். ஒரு கிலோ அரிசியை களமுனைக்கு எடுத்துச்செல்ல நாலு கிலோ அரிசியை கொண்டு செல்பவருக்கு செலவிடவேண்டியிருந்தது. அவ்வளவு தூரப் பிரயாணம். நெருப்பால் எழும் புகை விமானங்களை வரவழைத்துவிடும் என்பதால், ஆரம்ப நாட்களில் சமைக்காத உணவையே உட்கொண்டோம். என அந்த வழங்கல் பொறுப்பாளர் பூரிப்புடன் கூறியிருந்தார்.

### உருக்குயானைகள் படையணி:

இதேவேளை, முற்றுகைத் தாக்குதலுக்கு வேண்டிய கனரக ஆயுதங்களான ஆட்டிலறிகள் - பீரங்கிகளை சந்தடியின்றி பகைத்தளத்திற்கு அருகேயுள்ள சுடுதளங்களுக்கு எடுத்துவர உடல்வாகு கொண்ட ஆண்களை ஜெனரல் ஜியாப் அவர்கள் தெரிவுசெய்து - அணிகளாக்கினார். இவர்களுக்கு உருக்கு யானைகள் படையணி என அவர் பெயர் சூட்டினார். தியன் - பியன் - பூ தளத்திலிருந்து சுமார் 100 கிலோமீற்றர்கள் தூரம் வரை இந்த கனரக ஆயுதங்களை வாகனங்களும் மற்றும் மிருகங்களைப் பயன்படுத்தியும் போராளிகள் நகர்த்தினர். எஞ்சிய 100 கிலோமீற்றர்களையும் உருக்கு யானைப் படையினரே சுடுதளத்திற்குக் கொண்டு வந்தனர்.

சரமாரியான வான்தாக்குதல்கள் பீதியூட்டும் 'நேபாம்' எறிகுண்டுத் தாக்குதல் மற்றும் எறிகணை வீச்சுக்களுக்கு ஈடு கொடுத்து ஆட்லறிகளை கயிறுகளால் பிணைத்து அங்குலம் அங்குலமாக மலைப்பாங்கான நிலத்தில் இழுத்து சுடுதளத்திற்கு கொண்டுபோயினர்.

1954 மார்ச் 12ம் திகதி மாலை வேளை, போராளிகள் முற்றுகைச் சமரைத் தொடக்கினர். சுமார் 100 மோட்டர்கள் ஒரே சமயத்தில் இயக்கிய போராளிகள் தளம் மீது குண்டு மழை பொழிந்தனர். சமர் தொடங்கி 15 நாட்களின் பின்னர் தியன் - பியன் - பூ தளத்துடனான வழங்கல் தொடர்பை பிரான்சியப் படைத் தலைமை இழந்தது.

பிரான்சியப்படைகள் தளத்தைவிட்டு பின்வாங்கி ஓடி - தப்புவதை தடுக்கும் வகையில், பெரும்படை ஒன்றை நகர்த்திய - ஜெனரல் ஜியாப் அவர்கள் - தடுப்பு நடவடிக்கைகளை அமைத்திருந்தனர். இதனால் தப்பியோடவும் முடியாது. அதேவேளை சரணடைந்து பெரும் தொகை ஆயுத தளவாடங்களை போராளிகளுக்கு வழங்கவிரும்பாததாலும் அழிவுக்கான சமரை பிரான்சியப் படைகள் தொடர்ந்தன.

இதேசமயம் வியட்னாம் நிலமை உட்பட அன்றைய பனிப்போர் நிலமை பற்றிய வல்லரசுகளின் மாநாடொன்று ஏப்ரல் மாதத்தில் நடைபெற இருந்தது. இந்த மாநாடு தொடங்கமுன்னர் தளத்தைக் கைப்பற்ற ஜியாப் முயன்றார்.

அதன்மூலம் ஒரு அரசியல் வெற்றியையும் ஈட்ட பாடுபட்டார். ஆயினும், மாநாடு நடந்து முடிந்து சில வாரங்களின் பின்னரே தளத்தைக் கைப்பற்றினர். எனினும் கணித்தது போல அரசியல் வெற்றியையும் ஈட்டியிருந்தார்.

சமரின் ஒரு கட்டத்தில் வியட்னாம் போராளிகள் கடுமையான நெருக்கடியை எதிர்கொண்டு - திணறினர். பிரான்சியரின் வான்தாக்குதல் மற்றும் எறிகணை வீச்சுக்களால் பெரும் பாதிப்புக்களை போராள்கள் சந்தித்தனர்.

பிரச்சினைக்கு புதிய வழியொன்றைக் கண்டறிந்த ஜியாப்பிற்கு அதை நடைமுறைப்படுத்த சாதாரண மக்களே கை கொடுத்தனர்.

தளத்தின் மையப்பகுதியை குறிவைத்து பல பக்கங்களால் நீண்ட தூரபதுங்கு குழிகளை அமைப்பித்தார். ஒரு சில நாட்களில் சுமார் 250 கி.மீற்றர்கள் நீளமான பதுங்குகுழிகளை மக்கள் வெட்டிக் கொடுத்தனர். இவற்றைப்பயன்படுத்தி நகர்ந்த போராளிகள் தமது உயிரிழப்புக்களைக் குறைத்தபடி பகைத்தளத்தின் மையப்பகுதிவரை நகர்ந்து - தாக்கி தளத்தை கைப்பற்றியிருந்தனர்.

55 நாட்கள் நடந்த இந்த முற்றுகைச் சமரில் மூவாயிரம் பிரான்சியத் துருப்புக்கள் கொல்லப்பட்டனர். மேலும், மூவாயிரம் பேர் அங்கவீனர்களாயினர். சுமார் எண்ணாயிரம் துருப்புக்கள் கைதிகளாயினர். இவர்களைப் பலநூறு மைல்களுக்கு அப்பால் இருந்த சிறைச்சாலைகளுக்கு போராளிகள் நடத்திக் கூட்டிச் சென்றனர். இந்தப் பயணத்தின் போது கைதிகளில் அரைப்பங்கினர் நோய்கள் காரணமாக இறந்து விட்டனர். இதே வேளை வியட்னாம் தரப்பில் போரில் ஈடுபட்ட போராளிகள் மற்றும் மக்களில் சுமார் எண்ணாயிரம் பேர் பலியாகியிருந்தனர். தியன் - பியன் - பூ வீழ்ச்சியைத் தொடர்ந்து வந்த விளைவுகளால் பிரான்சியப் படைகள் வியட்னாமை விட்டு வெளியேறினர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





**கப்டன் விந்திரன் – எழிலரசன்.**

மணலாறு, தமிழீழப் போராட்ட வரலாற்றின் அழிக்க முடியாத அத்தியாயம். புலிச்சேனையை அரவணைத்த கங்காருத் தொட்டில். தமிழீழ விடுதலை என்ற அக்கினியைத் தன் மடி மீது வைத்துச் சீராட்டிய தாய். அக்கினியின் அத்திவாரமான எம் தலைவரைப் பொத்திவைத்த புனிதபூமி. எதிரியின் கணைகளையெல்லாம் தன் நெஞ்சில் தாங்கிய கவசம். குரங்குகளின் சில்மிசங்கள், நீரேரிகளின் மீது வெண்பூக்களைத் தூவியது போல் மிதக்கும் கொக்குகள். மனிதவாடை கண்டவுடன் தாவியோடும் கரடிகள். மலைக் குன்றென அசைந்தோடும் மூர்க்க யானைகள். உயர்ந்த மரங்களில் தாவியோடும் மர அணில்கள். தலைக்குமேல் குடைபிடிக்கும் பச்சையங்கள். அரணாக காத்துநிற்கும் கற்பாறைகள். திடீரென வெகுண்டெழுந்தோடும் காட்டாறுகள். இவைதான் எம் தலைவரை காத்துநின்ற இதய பூமி.

1989 இன் இறுதிக்காலம். 'செஞ்சோலை' எனும் பெயர் சூடிய 5வது பயிற்சி முகாம். இருநூறுக்கு மேற்பட்ட போராளிகளைப் புடம்போட்ட பாசறை. இப்பாசறையில் தான் விந்திரனும் பயிற்சியெடுத்தான். குறுளைகளை ஒன்றாக்கிய முதல் மூன்று பிரிவுகளில் விந்திரனும் ஓர் குறுளை. சிறந்த பயிலுனன். சிறந்த ஒழுக்கசீலன். தன்திறமையால் பொறுப்பாளரின் கண்களைத் தன்பால் ஈர்த்தவன். அடிப்படைப் பயிற்சி முடிந்தகையோடு விசேட பயிற்சிக்கு தெரிவானவன்.

ஒரு போராளியாக விந்திரனை நான் சந்தித்தது, என் நினைவுப் பரப்பில் குத்திய சிறு முள்ளாக இன்னும் என் இதயத்தை நெருடுகிறது. 'அமுதகானம்', காட்டிலுள்ள ஒரு முகாமின் பெயர். காட்டிலுள்ள போராளிகளிற்கு உணவளிக்கும் அட்சயபாத்திரம். எம்முகாமிற்கான உணவை எடுக்கச் சென்றேன். அங்குதான் விந்திரனையும் கண்டேன்.

'எங்கேயோ பார்த்த முகமாகக் கிடக்கு' உயிரில் கலந்திருந்த நினைவுகளை மீட்டினேன். மூளைத் திசுக்களைக் கசக்கினேன். அவன் சிரித்தபடி என்னை அணுகினான். பதினைந்து வயதுப் பால்முகம், பால் முகத்தில் கரிய, சிறிய கண்கள். கண்களிலே மற்றவர்களை ஊடுருவும் திறன். நிமிர்ந்த உறுதியான நடை. அவனது உயரத்தின் அரைவாசியை விழுங்கியிருக்கும் அவனது ஆயுதம். மொத்தத்தில் அவனது தோற்றம் வசீகரமானது. என் மூளைச் செல்களின் போராட்டம் ஓய்ந்தது. அவன் யார் என்று அறிந்து கொண்டேன். இவன் வல்வெட்டித்துறைப் பொடியன். வல்வெட்டித்துறை; போராட்டத்தீக்கு தீக்குச்சி கொடுத்த இடம். எத்தனையோ மாவீரர்களும், போராளிகளும் தவழ்ந்த கரையோர நகரம். எல்லாவற்றிலும் மேலாக எம் தலைவரை தாலாட்டிய தொட்டில். விந்திரனின் தொப்புள்கொடி உறவும் இங்குதான். 1974 சித்திரை மாதம் 19ஆம் திகதி - இது விந்திரனின் பிறந்த நாள். அம்மா புவனேஸ்வரி, அப்பா பஞ்சலிங்கம். இவர்கள் தங்கள் மகனுக்குச் சூட்டிய பெயர் பாலமுரளி. மூன்று அக்காவுக்கு அடுத்ததாக இவன். ஒரு தம்பியும் உண்டு. ஆரம்பக்கல்வி சிவகுரு வித்தியாசாலை எனும் கல்விக்கூடம்.

**அமுதசாகரன்**

வல்வெட்டித்துறை நகரத்தின் முதுகை இந்திய இராணுவச் சப்பாத்துக்கள் புண்ணாக்குவது வழமை. இராணுவம் இதயத்தை கிழித்துவிட்டுச் செல்லும். இரத்தம் பாய்ந்தோடும். அவ்விதயத்தின் சிறகுகளுக்குள்ளிருந்து புலிவீரர் வெளிவருவர். மீண்டும் புலிவேட்டைக்கு இராணுவ அரக்கர் வருவர். தருணம் பார்த்திருந்தனர் புலிகள்.

1989ஆம் ஆண்டு எட்டாம் மாதம் ஒரு நாள் அரக்கனின் பல் ஒன்று உடைந்து இரத்தம் வடிந்தது. உடனே 'வல்வைப் படுகொலை' எனும் கோரத்தாண்டவம் அரங்கேறியது. வல்வை நகரம் சுடுகாடாகியது. தீ நாக்குகள் நகரத்தைக் கரியாக்கின. விந்திரனின் இதயத் தீக்குச்சியிலும் ஒரு சிறு பொறி தெறித்தது. 'போராட்டமே எமை மீட்கும் மீட்பர்'. போராட்டம் என்னும் சிறகுக்குள் தன்னையும் புகுத்திக் கொண்டான். நடுக்கடலில் தத்தளிப்பவனுக்கு கட்டை கிடைத்ததுபோல் இவனுக்கு போராட்டம் எனும் கப்பல் கிடைத்தது. இறுகப் பற்றிக் கொண்டான்.

1990ஆம் ஆண்டு ஒரு நாள் 'மன்னாரிலிருந்து விசேட பயிற்சி முடித்துவிட்டு அணியொன்று வந்திருக்கின்றது.' காற்று என் காதில் சேதி சொல்லிச் சென்றது. அவ்அணியில் விசேட பயிற்சி முடிந்து விந்திரனும் ஒருவனாக வந்திருந்தான். அகழ்ந்தெடுக்கப்பட்ட வைரத்திற்கு பட்டை தீட்டப்பட்டிருந்தது. என்னைக் கண்டதுமே அவன் முகம் பிரகாசமானது. அதே புன்னகை, அதே கண்கள். ஆனால் ஒரு வித்தியாசம், தோளிலிருந்த ஆயுதம் சிறியதாகத் தோன்றியது. நேற்றைய தூற்றலுக்கு துளிர்த்த புற்கள் போல் மீசையும் அரும்பியிருந்தது.

# பாதங்கள் பார்த்து சுவடுகள் காத்திருக்கின்றன...

சக போராளிகளிடம் என் வாயைக் கொடுத்தேன். விந்திரனின் திறமைகளைப் புகழ்ந்தார்கள். மீனுக்கு நீச்சல் எப்படியோ, பறவைக்கு பறத்தல் எப்படியோ, அப்படியே விந்திரனுக்கு பயிற்சிகளும் என்றனர். இவனை அடிக்கடி சக போராளிகள் சீண்டுவது வழக்கம். ஆனாலும் இவனுக்கு கோபம் வராது. விந்திரனிடம் பேச்சுக் கொடுத்தேன். 'எம் அணி கஜபவத்தை முகாம் தாக்குதலுக்குச் சென்றது. எங்களைச் சின்னப்பெடியள் என்று சொல்லி சப்ளையில விட்டுவிட்டினம்'. இதைக் கூறும் போது அவன் முகத்தில் மின்னலைக் காணமுடியவில்லை. இருளையே காண முடிந்தது.

விந்திரன் அதிஷ்ரக்காரன். எவருக்குமே அரிதில் கிடைக்காத பணி அவனைத் தேடி வந்தது. அவனது திறமைக்குக் கிடைத்த அரும்பணி எமது தேசியத் தலைவரின் மெய்ப்பாதுகாவல் அணிக்குத் தெரிவானான். எல்லாத் திசைகளுக்கும் ஒரே நேரத்தில் வெளிச்சம் தருகின்ற எம் தலைவரின் நிழலில் தவழும் பாக்கியம்.

போராட்டத்தேர் முன்னோக்கிச் சென்று கொண்டேயிருந்தது. இதுவரை காலமும் ஒரு சண்டைக்குக்கூட போகவில்லை. எனும் கவலை அவனை வாட்டியது. பலவேகய II இராணுவ நடவடிக்கைக்கு எதிராகச் செல்லும் அணியில் விந்திரனும் ஒருவன். செய்தி இதயத்தை பூந்தளிரால் தடவியது. உயிரைப் பூவால் வருடிச் சென்றது. நுரையீரலுக்குள் இனிப்பூட்டிய காற்றுப் புகுந்தது.

இயக்கச்சி; எமக்குச் சாதகமற்ற நிலப்பரப்பு. 'ஒமர் முக்தார்' எதிரியை பாலைவனத்தில் எதிர்த்ததுபோல் சிறு சிறு பற்றைகளே எம் காப்பு. கரிய பெரிய களிறு போல் எதிரியின் ராங்குகள். கார்த்திகை மாதத்து மழையென செல்கள். இவற்றிற்கு



**போராளியின் குருதிச்சுவடுகள்**

மத்தியில் விந்திரனின் கன்னிக் களம். பசித்திருந்தவனுக்கு பாலும் பழமும் கிடைத்தது. விந்திரனும் கிடைத்த சந்தர்ப்பத்தை திறமையாகப் பயன்படுத்தினான். பலரது பாராட்டுக்களைப் பெற்றான்.

அவனது திறமை எனும் மூலதனத்திற்கு மீண்டும் பரிசு எனும் 'லொட்டரி' விழுந்தது. தேசியத் தலைவரின் உதவியாளர்களில் ஒருவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான்.

'ஸ்பிறிங்' கட்டிலின் மீது ஏறிநின்று துள்ளும் குழந்தைபோல் இவனது உயிரின் ஒவ்வொரு அணுக்களும் மகிழ்ச்சியில் துள்ளின. தலைவரின் சிறகுகளிற்குள் இருந்தபடியே அவரது புத்திமதிகளையும் அறிவுரைகளையும் கேட்கும் பாக்கியம். வானத்தின் கீழ் சில சதுரமைல்களையே அறிந்துவைத்திருந்தவன், எட்டுத் திசைகளின் விளிம்புகளுக்கே சென்றான்.

தாமரை இதழ் மீதிருக்கும் சேறுபோல் போராளிகளுக்கு இருக்கும் அந்நிய மொழிப் பெயர்கள் எல்லாம் தூய தமிழுக்கு மாற்றப்பட வேண்டும். விந்திரன், எழிலரசன் ஆனான் அவனது பண்புக்கும் உருவத்திற்கும் ஏற்றமாதிரி தேசியத் தலைவரால் சூட்டப்பட்ட பெயர் இது.

1995ஆம் ஆண்டு சந்திரிகாவின் பேச்சு வார்த்தை. விரைவிலேயே முகத்திரை கிழிந்தது. அரசின் கோரமுகம் தெரிந்தது. மீண்டும் சண்டைக்குப் போகும் வாய்ப்புக் கிடைத்தது. சண்டைக்குப் போதல் என்பது, ஒரு போராளியின் மனதைக் குளிர்விக்கின்ற மர்மமழை. போராட்ட வாழ்க்கையின் ஆறுதல் மந்திரம். சிறுபிள்ளைக்குக் கிடைத்த இனிப்பு. இதயத்தை மயிலிறகால் வருடுகின்ற இன்பசுகம்.

எழிலரசனுக்கு ஓர் இலக்கை வேவு பார்க்கும் பணி தரப்பட்டது. இதில் ஈடுபடும்போது ஏற்படும் அனுபவம் புதுமையானது. இருட்டை நண்பனாக்கி, எதிரியின் முள்ளுக்கம்பியினூடாக தவழுவதும், உருளுவதும், எதிரி அறியாமலேயே அவனது தலைவாசலில் நடமாடுவதும், அவன் அறியாமலே அவனது முக்காட்டை விலக்கி அவன் முகம் அறிவதும், இவையெல்லாம் சாதாரண மனிதரால் முடியாது. இரும்பையொத்த மனவுறுதி வேண்டும். எழிலரசனும் இரும்பையொத்தவன்தான். அவன் சென்றால் பழம் இன்றி வரும் நாட்கள் மிகக்குறைவு.

கடின மேற்பரப்பைக் கொண்ட சிப்பிக்குள்தான் ஒளிவீசும் முத்து உள்ளது. இவனுக்குள் மேலும் சில திறமைகள் ஒளிந்திருந்தன. இவன் ஒரு கலைஞனுங்கூட. தேசத்தின் புயல்கள், கரும்புலிகளின் வீரத்தைச் சாற்றும் சலனப்படம். பொ. தாசனின் கைவண்ணத்தில் உருவான காவியம். மக்களின் இதயங்களைச் சிறுமுள்ளாகக் கீறி கண்ணீர் சிந்த வைத்த ஓவியம். இதில் ஒரு கரும்புலி வீரனாக எழிலரசன் நடித்திருந்தான்.

விடுதலைப் புலிகளின் தொடர் அதிரடிகளால் தென்னிலங்கையில் அரசுக்குப் பெரும் நெருக்கடி. நீர்ப்பாம்பென வழுக்கிச்செல்லும் தன் செல்வாக்கை உயர்த்த வேண்டும். எவ்விலை கொடுத்தாலும் பரவாயில்லை. ரத்வத்தையின் தலைமீது இப்போது கத்தி. முன்னேக்கிப்பாய்ந்தது சிங்களப்படை. புலிகளும் புலிப்பாய்ச்சலால் பதிலடி கொடுத்தனர். எழிலரசனுக்கும் பாயும் சந்தர்ப்பம் கிடைத்தது.

அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, தமிழரின் கல்விக்கூடம்; சிங்களவனின் ஆயுதக் கூடமாக மாறியிருந்தது. புலிப்பாய்ச்சலின் ஓர் அங்கமாக இம் முகாம்மீது பட்டப்பகலில் பாய்ந்தனர் புலிவீரர்கள். முன்னணிக் காவலரண் ஒன்றின் மீது கைக்குண்டொன்றை எறிந்து சண்டையைத் தொடங்கினான் எழிலரசன். இராணுவம் எலியெனப் பின்வாங்கி ஓடியது. ஆயுதங்களைப் புலிவீரர் அள்ளினர்.

மீண்டும் அரசாங்கம் கண்டனங்களுக்குள்ளானது. மாங்காய் பிடுங்கும் போது பால் கண்ணுக்குள் தெறித்த கதையாகியது. பச்சை மரத்திலுள்ள கிளியை சொண்டை வைத்து அடையாளம் காணலாம். ஆனால் புலிவீரரை எப்படிக் கண்டு பிடிப்பது? ரத்வத்த தலையைச் சொறிந்தார். அடுத்த அடியை அவதானமாக வைக்கவேண்டும்.

மீண்டும் பாரிய படையெடுப்புக்கான ஆயத்தங்கள். காலுடைந்த சிங்களத்துக்குப் பச்சிலைவைத்துக் கட்டப்பட்டது. ஆயுதக் கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்தை நிறைத்தன. அங்குமிங்கும் இரும்புப்பறவை பறந்தது. கிழக்கிலிருந்தும் சிங்களப் படை வடக்கிற்கு நகர்ந்தது. பலாலி பச்சையுடைத் திருவிழாவானது. புலிகளும் ஆயுதங்களைத்துடைத்து எண்ணையிட்டனர். தமிழர்சேனை தயாராகியது. எழிலரசன் ஒரு செக்சன் லீடராக நியமிக்கப்பட்டான். கடும் பயிற்சிகள் நடந்தன. ஒழுங்கு, வேகம், உருமறைப்பு, எல்லாவற்றிலும் திறமையாகச் செயற்பட்டு எழிலரசனின் அணி பாராட்டுக்களைப் பெற்றது. எல்லோருக்கும் இவனது அணியே முன்னுதாரணமாகக் காட்டப்படுவது வழக்கமாகியது. கூட்டத்தில் முன்னணியில் பறக்கும் கொக்குப்போல, இவனும் எப்போதும் எல்லாவற்றிலும் முன்னணியிலேயே நின்றான்.

1995, 10ஆம் மாதம் முதலாம் திகதி, இடி முழக்கம் எனும் பெயரில் இடி இடித்தது. மழைக்காலத்து ஈசல்கள் போல் இராணுவம் முன்னேறியது. அச்சுவேலி, புத்தூர்ப் பிரதேசம் பச்சையுடையானது. இதற்கு எதிராக ஒரு தாக்குதல். எழிலரசன் இத்தாக்குதலின்போது விழுப்புண்ணுற்றான். இத்தாக்குதலில் நினைத்த வெற்றியை எம்மால் பெறமுடியவில்லை. ஆனாலும் எதிரிக்கும் பெரும் சேதம் ஏற்பட்டது.

இதே மாதம் பதினேழாம் திகதி. சூரியக்கதிர் யாழ்.குடாவைச் சுட்டெரித்தது. எழிலரசன் குணமடைந்தான். இவன் குறிபார்த்துச் சுடுவதலில் மிகத் திறமைமிக்கவனாக இருந்தான். இவனது சூடுகள் அனேகமாகப் பத்துக்களுடனேயே உறவாடுவது வழக்கம். எப்போதாவது ஒன்பதுகளுடன் சம்பந்தம் வைத்துக் கொள்ளும். இத்திறமை இவனை வேறொரு பணிக்கு இட்டுச் சென்றது. குறுகியகாலப் பயிற்சி முடித்து ஒரு பதுங்கிச்சுடும் வீரனாக சூரி

(தொடர்ச்சி 11-ம் பக்கம்)




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






### போர் முற்றுகை வாழ்வும் போருக்கான வாழ்வும்




இன ஒடுக்கல் நடவடிக்கையினால் நாங்கள் அரசியலில் ஓர் எதிர்கால எண்ணக் கருவை (Concept of futurology) ஏற்படுத்திக் கொண்டோம். இது ஓர் கொள்கை மாற்றமாகும்.

அதனை நிலை நிறுத்துவதற்கு அல்லது அடைவதற்கு எம்மை முழுமையாக அர்ப்பணிப்பதே கருத்து மாற்றம். இது இலக்கை அடையும் வரைதொடர்ந்து இயங்கும் (Going concern concept) எண்ணமாக இருக்க வேண்டும். இனி போருக்கான வாழ்விற்கு கருத்து மாற்றத்தின் சந்தர்ப்பங்களை விரித்துப் பார்ப்போம்.

## பிற்போக்குச் சிந்தனைகளுக்கு எதிரான கருத்து மாற்றம்

அன்றாடம் எமது சமூக அசைவியக்கத்தின் பால் செல்வாக்கு செலுத்திக் கொண்டிருப்பவற்றில் பிற்போக்கான சிந்தனைகள், மாறாச் சிந்தனைகள், மூட நம்பிக்கைகள் என்பன செல்வாக்குச் செலுத்துகின்றன. பிற்போக்கான சிந்தனை என்பது சமூகத்தில் பல அங்கத்தினிடையே ஓர் அங்கத்தினர் தமது வாழ்வினால், வாழ்வின் உயர்ச்சியால் பிறர் பாதிப்படைவதை கருத்தில் கொள்ளாது இருப்பதைக் குறிப்பிடலாம். இதற்கு உதாரணமாக ரஸ்ய அதிபர் பொரிஸ் யெல்ட்சின் சோவியத் குடியரசின் அதிபர் கொர்ப்சேவ்வை பழி வாங்கும் நடவடிக்கையின் ஒரு வெளிப்படுத்தலே சோவியத் குடியரசை உடைவுக்கு இட்டுச் சென்றதாகும்.

அடுத்து மூட நம்பிக்கை எனும் அழுக்காற்றில் முழ்கித் தவிக்கும் எமது சமூகம் அது போருக்கான வாழ்வை அமைத்துக் கொள்வதற்கு தடையாக இருப்பதனைப் புரிந்து கொள்வதில்லை. எத்தகைய துன்பங்கள், துயரங்கள் வந்தாலும் அதனை ‘விதி’ என்றும் ‘காலம் தான் பதில் சொல்லும்’ என்றும் இந்த மூட நம்பிக்கைகள் மீது தூக்கிப் போட்ட பின்பு தற்காலிக ஓய்வை அல்லது திருப்தியை ஏற்படுத்திக் கொள்கின்றனர்.

எதனையும் இலகுவாக இன்னொன்றில் தூக்கிப் போடுவதில் நாம் வெற்றியடைவது நொடிப்பொழுதாகவே இருக்கும். காலத்தின் மீது பழியைப் போடும் எம்சமூகம் அந்த காலத்தை உருவாக்குவதும் பிரசவிப்பதும் மனித செயற்பாட்டிலேயே தங்கியுள்ளது என்பதனைப் புரிந்து கொள்வதில்லை போலும். காலம் தன்பாட்டில் சென்று கொண்டிருக்கும். அதில் வரும் எச்சங்கள் ஏற்றத்தாழ்வுகளை உருவாக்குவது மக்களே. காலத்தையும் எமது கடமைகளையும் சரிவர இணைப்பதன் மூலம் ‘காலம் தான் பதில் சொல்லும்’, ‘எல்லாம் விதி’ என்ற நம்பிக்கைகளிற்கு விடை கிடைக்கும்.

ஒக்டோபர் புரட்சிக்கு முன்பு நிறைந்த தொழிலாளர் வர்க்கத்தினைக் கொண்டு விளங்கிய மக்களிற்கு ரஸ்சியாவில் வாழ்ந்த மேம்பட்ட வர்க்கம் பல இன்னல்களை விளைவித்ததுடன் அது ‘தொழிலாளர்களது விதி’ என்றும் ‘முன் வினைப்பயன்’ என்றும் ‘பொறுமையாகச் சகித்துக் கொண்டிருந்தால் அந்த வினை தீர்க்கப்படும்’ என்ற மாயைகளையும் தொழிலாளர்களிற்கு ஊட்டி வந்தது. இதனைத் தொழிலாளர்களும் ஏற்றுக் கொண்டு தான் வாழ்ந்தனர். ஈற்றில் அத்தகைய மூட நம்பிக்கைக்கு எதிரான கருத்து மாற்றமே ஒக்டோபர் புரட்சிக்கு ஊன்று கோலாக இருந்தது என்பதனை நிறைவில் கொள்ள வேண்டும்.

எனவே போருக்கான வாழ்விற்கு எம்மிடம் உள்ள அன்றாட வாழ்வில் இருக்கும் பிற்போக்கான சிந்தனைகள், மூட நம்பிக்கைகள் என்பவற்றை இழப்பதே அல்லது அறவே ஒழிப்பதே பிற்போக்கான சிந்தனைக்கு எதிரான கருத்து மாற்றம் ஆகும்.

## இலங்கை சனநாயகத்திற்கு எதிரான கருத்து மாற்றம்

இலங்கைத் தீவில் தனித்தனியே வாழ்ந்த இரு தேசிய இனங்களையும் ஒன்று சேர்த்து, ஒற்றை ஆட்சி என்ற வலைக்குள் இழுத்து, தமிழ் தேசிய இனத்தைச் சிறுமைப்படுத்தி சனநாயகம் என்ற போர்வைக்குள் வைத்து எமது இனத்திற்கு இழைக்கும் கொடுமைகளை இன்று சர்வதேசமே புரிந்து கொண்டிருக்கின்றது.

சனநாயகத்தில் மனிதனது அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளிப்பதும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதும் தலையாய செயற்பாடுகளாகும். இலங்கையின் பௌத்த பேரினவாத சனநாயகம் மதிப்பளியாதது மட்டுமல்ல, அதனை மறுத்து வருவதும் மறுப்பிற்கு எதிர்புணர்வு செய்வோரை பயங்கரவாதிகள் எனச் சிறையிலிடுவதும் புதைகுழிகளுள் போட்டுமூடுவதும் வழமையாகிவிட்டது, தன்னைப் பற்றி தன் சொந்த மொழியில் கூற முடியாத தனது நிலத்தில் வாழ முடியாத தனது உற்பத்தியைத் தானே உண்ணமுடியாத நிலைமை உலகில் உள்ள சனநாயகங்களில் இலங்கையிலேயே அதிகம் இருக்கின்றது.

மொழியுரிமை நிலவுரிமை கல்வியுரிமை என்பனவற்றோடு மட்டும் நின்றுவிடாது தமிழர்கள் வாழ்வதற்கான ஆதாரங்களை அழித்தும் தடைசெய்தும் தேசிய ஆன்மாவை நசுக்கும் பொருட்டு பொருளாதார முயற்சியினை மறுத்தும் சொந்த நிலத்தில் ஏதிலிகளாக்கியது இலங்கைச் சனநாயகம். இதன் பிரதிபலிப்புகள் சிறீலங்காவிலேயே சிங்களவர்களையும் முஸ்லீம்களையும் பாதித்த வண்ணம் இருக்கின்றது. வாழ்விற்கும் சுதந்திரத்திற்கும் சந்தோசத்திற்கும் உள்ள உரிமை இலங்கைச் சனநாயகத்தில் இல்லை. அதனைச் சிங்கள பேரினவாத அரசு.. தரமாட்டாது என்பது யாவரும் அறிந்த உண்மை. இது இவ்வாறிருக்க இன்னமும் அந்த அரச இயந்திரத்தைப் பற்றிப்பிடித்துக் கொண்டிருப்பவர்களும் அரச பயங்கரவாத சனநாயகத்திற்கு எதிராக இன்னமும் வலு சேர்க்காது எம்முள் வாழ்வோரும் இலங்கைச் சனநாயகத்திற்கு எதிரான கருத்து மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். ஏனெனில் இந்த ஆட்சியமைப்பானது தமிழ் இனத்தின் கௌரவத்தை மதிக்காது அதனை அழித்து வருகிறது. (Destroys the dignity) இந்த ஆட்சியமைப்பானது தமிழர்களின் தனித்துவத்தை ஏற்றுக் கொள்ளாது அதனை அழித்து வருகின்றது. (Destroys the identity)

கௌரவ அழிப்பு என்பது எமது சுயநிர்ணய உரிமைக்கு மதிப்பளிக்காமல் அதனை எதிர்த்துப் போராடுவதை சிறுமைப் படுத்துவதுமாகும். தனித்துவ அழிப்பு என்பது எம் இனத்தின் தாயக பூமி அபகரிக்கப்படுவதும் எமது மொழி, மத, கலாச்சார, பொருளாதார வளர்ச்சி புறக்கணிக்கப்படுவதையும் அழிக்கப்படுவதையும் குறித்து நிற்கின்றது. இதனை செவ்வனே செய்து வரும் இலங்கைச் சனநாயகத்திற்கு எதிராக முழுமையான ஓர் கருத்து மாற்றம் ஏற்படுவது அவசியம்.

## குடியேற்றத்திற்கு எதிரான கருத்துமாற்றம்

ஓர் இனமானது மொழியுரிமை உட்பட அனைத்து உரிமைகளையும் இழப்பினும் திரும்பவும் அவற்றைப் பெற்று வாழ்வதற்கான சாத்தியக் கூறுகள் உண்டு. ஆனால் அந்த இனம் தனது தாயகத்தை தனது வாழ்வகத்தை, தனது பாரம்பரிய உறைவிடத்தை பறிகொடுக்குமாயின் அந்த இனத்தின் எதிர்காலம் கேள்விக்குறியாகவேயிருக்கும். (Land is necessary for the self expression of an ethnic group) என தந்தை செல்வா 35 வருடங்களுக்கு முன்பே கூறியுள்ளார். இதனை நன்குணர்ந்த சிங்கள இனவெறியாளர் ஒருவர் If we do not occupy the border will the border come to us என கூறினார். இதற்கான ஒரு திட்டத்தை அன்றைய சனாதிபதியாக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனா 1985 ஜனவரியில் ஆனமடுவ எனும் இடத்தில் பாடநூல் வழங்கல் வைபவத்தில் வெளியிட்டார்.

## 1985 ஆனமடுவ உரையும் 1997 ஜெயசிக்குறு நகர்வும்

ஆனமடுவ எனும் இடத்தில் சனாதிபதி கூறியதாவது ‘ஓமந்தை தொடக்கம் ஆனையிறவு வரையிலான தமிழர் பிரதேசங்களில் இரண்டு இலட்சம் சிங்களவர்களை குடியேற்றுவதன் மூலம் தமிழர்களின் பிரிந்து வாழ்தல் என்ற கொள்கையை அழிக்கமுடியும்’

தொடர்ச்சி 11-ம் பக்கம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உண்மையின் முகம்

– செ.வைகறையான் –

இருளில் மூழ்கிக் கிடந்த வெளியைப் பார்க்கும்போது என-க்கு சூனியத்தைப் பார்க்குமாற்போல் இருந்தது. அநேகமாக பச்சை வயல்களும் பசுமரக் காடுகளும் மாறிமாறிக் கண்ணில்பட்டு குளிர்ச்சி தரவேண்டிய சூழலிற்தான் எமது புகை வண்டி மிகவும் வேகமாக கடந்து கொண்டிருந்தது. குளிர்காற்று முகத்தில் பட்டு புத்துணர்ச்சி ஒன்றைத்தர மீண்டும் சூனியத்தை வெறிக்கிறேன். எங்கும் எதிலும் இருளின் ஆதிக்கம்.

இரவு 08.30 மணியளவில் வவுனியாவில் வைத்து யாழ்தேவியில் ஏறிய சிறிது நேரத்திலேயே மகன் நதீசன் நித்திரை கொண்டது நல்லதாய்ப் போய் விட்டது. இல்லாவிட்டால் இவன் கேட்கும் கேள்விகளையும் அதற்கு நான் பதில் சொல்வதையும் பார்க்கும் ஏனைய பயணிகளின் விசனப் பார்வைக்கு முன்தலை தூக்க இயலாமலிருந்திருக்கும். நதீசனின் சுட்டித்தனத்தாலேயே இரவு ரயிலை நான் தெரிவு செய்தேன்.

மல்லாவியிலிருந்து வவுனியாவுக்கு பெரும் சிரமத்தின் பின் வந்து சேர்ந்ததும் இவன் ஒவ்வொன்றையும் பற்றிக் கேட்டபோது தலையே சுற்றியது. நதீசனின் கேள்விகள் அப்படிப் பெரிதாக ஒன்றுமிராது. பத்து வயதுப் பிள்ளை பெரிதாக என்னத்தைத்தான் கேட்டுவிடப் போகிறான். ஆனால் பதில் சொல்லத்தக்க முறையில் கேள்விகள் இராது.

மன்னார் ஊடாக வவுனியாவுக்கு வந்துகொண்டிருந்த வேளை இவனது கேள்விகளில் 'ஏனப்பா ஆமி இப்படிச் 'செக்கிங்' செய்யிறான்? எங்களை மட்டும்தான் இப்படிச் சோதிப்பினமா? புலி மாமாக்கள் வந்தால் இவையள் இதிலை நிற்பினமா? ஏனப்பா புலி மாமாக்கள் இவையளை இன்னும் இப்படி விட்டு வைச்சிருக்கினம்' இப்படிப் பல.

இவனைக் கூட்டி வந்தால் இப்படிப் பல பிரச்சினைகள் வருமெண்டு தெரியும்தான். என்ன செய்ய? இவனது மாமி, எனது அக்கா இவனைப் பார்க்கவேண்டும் என்று தொடர்ச்சியாகக் கடிதம் போடுவா, அவாவுக்கு இவனது வயதில் லக்சன் என்ற பெயரில் ஒரு மகன் இருக்கிறான். அத்தோடு இவனது தாயும் வேலைவிடயமாக வவுனியாவில் ஏதோ ஒரு பயிற்சிக்கென வந்துவிட்டாள். நானும் அவசரமாகக் கொழும்பு சென்று வரவேண்டியிருந்தது. அதனாலேயே அவனையும் கூட்டிவருகிறேன். 'கடவுளே கொழும்புக்குப் போய்வருமட்டும் சரி, இவன் தன்ரை வாயைக் கொஞ்சம் கட்டுப்படுத்தி வைச்சிருக்க துணை புரிய மடியில் படுத்திருந்த மகனைத் தட்டிக்கொடுத்து, பெருமூச்சு ஒன்றை வெளியிட்டு, மெதுவாய்க் கண்களை மூடிக்கொண்டேன்.

அத்தான் தந்திருந்த குறிப்புகளும் விலாசமும் தெளிவாக இருந்ததால் பிரச்சினை இல்லாமல் அவர்களின் வீட்டுக்குப் போய்ச்சேர முடிந்தது. எங்களைக் கண்டதும் அக்காவும் அத்தானும் திகைத்துப்போய் பிரமித்து மகிழ்ந்து வரவேற்றனர்.

அக்கா நதீசனைத் தூக்கிக் கொஞ்சினாள் நதீசன் வெளிப்படையாகத் தயக்கம் காட்டாவிட்டாலும் அவர்கள் பிடியிலிருந்து மெதுவாகத் தன்னை விடுவித்துக் கொண்டான். நாம் கொண்டு சென்றிருந்த பனங்கிழங்கு, மாம்பழம், பருத்தித்துறை வடை போன்றவற்றைத் தாய் தந்தாகக் கூறி லக்சனிடம் கொடுத்தான்.

லக்சன் நதீசனைவிட அழகாகவும் குண்டாகவும் சற்றுத் தெளிவாகவும் தெரிந்தான். நதீசன் கொடுத்த பொருட்களை வாங்கிக் கொண்டு 'தாங்யூ' என்று அழகாகவும் கூறினான். நதீசன் மென்மையாகப் புன்னகைத்தான்.

வழக்கமான உபசார வார்த்தைகள், பரஸ்பர குசலவிசாரிப்புக்களுக்குப் பின் அவரவர் தங்கள் வேலைகளைக் கவனிக்க நானும் நதீசனும் சற்றுக் கண்ணயர்ந்தோம்.

யாரோ தட்டியதைப் போலிருக்க திடுக்கிட்டு முழித்தேன். லக்சன் அழகாகச் சிரித்துக்கொண்டு நின்றான். 'பிளீஸ், லஞ் எடுக்க வாங்கோ அங்கிள்' என்று அழகாக அழைத்தான். 'தாங்யூ' என்ற நான் நதீசனை எழுப்பி மதியச் சாப்பாட்டை முடித்தேன்.

இப்படி எல்லோரும் மதியச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு ஹோலில் வந்து அமர, லக்சனும் நதீசனும் விளையாடத் தொடங்கினார்கள். அத்தான் லக்சனின் மேல் அதீத பற்றுக் கொண்டிருந்தார். ஏராளமான விளையாட்டுப் பொருட்களை லக்சன் வைத்திருந்தான். ஒவ்வொன்றையும் எடுத்து அவன் ஒவ்வொரு கதை சொல்லிக் கொண்டிருக்க என் மகன் நதீசனோ வாயைத் திறந்தபடி எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தான் மௌனமாக.

'இப்ப இந்தப் பிளேன், எயாப் போட்டில இறங்குதாம்' என்று கூறி லக்சன் விமானத்துக்குரிய சத்தத்தை எழுப்ப 'இந்தப் பிளேன் எதுக்காலை குண்டுபோடும்' என்று அப்பாவித்தனமாக நதீசன் கேட்டான்.

'இதிலை குண்டு போடுறதா ஹி... ஹி....' சிரித்தான் லக்சன்.

நதீசன் பரிதாபமாக என்னைப் பார்த்தான். அவர்கள் சம்பாஷனையும் விளையாட்டும் தொடர்ந்தது.

'இது என்ரை காராம், நீங்கள் எனக்கு ரெலிபோன் பண்ணுங்கோ' என்றான் லக்சன்.

'டெலிபோனா? அப்படியெண்டா?' - நதீசன்.

'ஐயோ உங்களுக்கு ரெலிபோன் தெரியாதா? இதுதான் ரெலிபோன்' என்றான் லக்சன்.

'இத என்ன செய்யிறது' என்றான் நதீசன்.

'இதை எடுத்துக் கொண்டு இந்தப் பட்டின்களை அழுத்தவேணும் - நான் செலூலருல கதைப்பன்' என்றான் லக்சன்.

'செலூலுவா? அது எப்படியிருக்கும்' - நதீசன்.

'செலூலு இல்ல செலுலர்- அதுவும் ஒரு ரெலிபோன்தான்; ஏன் இது உங்களுக்குத் தெரியாதா? உங்கட ஊரில இதுகள் இல்லையா? லக்சன் கேட்க நதீசன் வெட்கத்தோடும் வேதனையோடும் என்னைப் பார்த்தான். நான் தெரியாததுபோல் பேப்பரைப் பார்க்குமாற்போல் தலையைக் குனிந்து கொள்ள அக்கா சிரிப்பது கேட்டது.

'சரி வேற என்ன விளையாடுவோம்? இந்தக் கணக்குகளை கம்பியூட்டருக்குக் கொடுத்து விடையெடுப்பமா?' என்றான் லக்சன்.

'கம்பி...... யூட்டரா?' - நதீசன்.

'அட உங்களுக்குத்தான் ஒண்டும் தெரியாதே. இதில எங்கட கணக்கைரைப் செய்தா விடைகிடைக்கும்' என்றான் லக்சன்.

லக்சனின் இந்தப் பதிலில் நதீசன் மட்டுமல்ல நானும்தான் வெட்கிப் போனேன். 'உங்களுக்குத்தான் ஒன்றும் தெரியாதே' எவ்வளவு கொடூரமான சொல். இந்தச் சிறுவனுக்கும் இங்குள்ள பெரியவர்களுக்கும்கூடத் தெரியாது. எங்களுக்கு ஏன் இதெல்லாம் தெரியாமற்போனதென்று. அவர்களுக்கு இது பற்றியெல்லாம் கவலையே கிடையாது. எங்கட பகுதியில் இருக்கிற எங்கட இன்றைய சந்ததியில் எத்தனை பேருக்கு மின்சாரத்தையும், புகையிரதத்தையும், மின்னணுச்சாதனங்களையும் தெரியும்? எம்மினத்தின் மேல் மேற் கொள்ளப்பட்டிருக்கும் அடக்குமுறை மட்டுமில்லாவிடின் இவர்கள் ஒவ்வொருவரும் எம்மிடமன்றோ கையேந்தியிருக்கவேண்டும். எமது சமுதாயத்தின் உணர்வுகளும் உணர்ச்சிகளும் இவர்களுக்கும் தெரியாது.

சிறுவர்கள் தொடர்ந்து ஏதேதோ கதைத்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். சிறிது நேரத்தில் - விளையாட்டு இராணுவ அணிப் பொம்மைகளை வெளியே எடுத்தான் லக்சன்.

'ஆர் ஆமியோ?' என்ற நதீசனின் கண்களில் கோபம் திடீரென கொப்பளித்து நின்றது.

'ஓம்' என்ற ஒற்றைச் சொல்லுடன் அவற்றைத் தரையில் கொட்டினான் லக்சன்.

கட்டட அமைப்புச் செய்யும் சிறிய பிளாஸ்ரிக் பெட்டிகளைக் கொண்டு ஒரு இராணுத் தளத்தை உருவாக்கினான். சில விளையாட்டு வாகனங்களையும் அவற்றின் நடுவே வைத்தான் நதீச்ன். இவற்றை ஒன்றும் புரியாமல் லக்சன், நான், அக்கா எல்லோரும் பார்த்துக் கொண்டிருந்தோம். சில இராணுவப் பொம்மைகளையும் இடையிடையே நிறுத்திய நதீசன். வேறு சில இராணுவப் பொம்மைகளை தெரிவு செய்து எடுத்துக் கொண்டு, பேசலானான்.

'இது எங்கட இடத்தில வந்திருக்கிற ஆமியள். எங்கட புலிமாமாக்கள் இவங்களுக்கு அடிக்கப் போகினம். இவங்களைச் சுடப்போகினம். காம்பெல்லாம் இடிக்கப் போகினம். என்று சொன்னான். 'டும்...டுடும்...டும்.. டட்...டடட்... ட்டும்...ட்டும்' என்று கத்திக்கொண்டு தான் புறம்பாக தெரிவு செய்து வைத்திருந்த இராணுவப் பொம்மைகளை முன்னால் நகர்த்தினான்.

'லக்சன் எல்லாத்தையும் தூக்கி உள்ளுக்க வை உந்த விளையாட்டொண்டும் இப்ப வேண்டாம்' அக்காவுக்கு ஆமி, புலி என்று சொல்லப் பயம். ஆரும் அவதானித்தால் பிறகு பிரச்சினையென்ற முன்னெச்சரிக்கை. ஆனா, பிள்ளைகள் விடாமல் தொடர்ந்தார்கள்.

'டொல்...டொல்....டொல்...டொல்... டும்...டுடும்....டுடுடு..' கத்திக் கொண்டு அதுவரை அழகாக அடுக்கி அமைத்த இராணுவத் தளத்தை அடித்துச் சீர்குலைத்தான் இறுதியில்.

'காம்பை முழுவதும் தரைமட்டமாக் கியாச்சு' என்று கூறி தான் எடுத்து வைத்திருந்த இராணுவப் பொம்மைகளை எடுத்துப் புறம்பாக வரிசையாக அடுக்கினான். ஒரு பொம்மையைக் கிடத்தி வைத்தான்.

'என்ன இது?' என்று லக்சன் ஒன்றும் புரியாமல் கேட்க, நதீசன் 'உங்களுக்கு இதுவெல்லாம் தெரியாதே, எங்கட ஊருக்க ஆமியிருந்தா புலிமாமாக்கள் அடிப்பினம், ஆமியளைச் சுடுவினம். பெரிய சண்டையெல்லாம் நடக்கும். செத்துப் போன ஆமியளின்ரை துவக்கெல்லாம் அவயள் எடுத்துப்போவினம். சண்டையில சாவடைஞ்ச புலிமாமாக்களை எடுத்துவந்து ஊரில வைப்பினம். நாங்கள் பூமாலையும் பூக்களும் கொண்டு போய் அவையளுக்கு வைப்பம் இவர் எங்களைக் காப்பாற்றின மாவீரர் என்று அந்த உருவத்தகைக் காட்டிவிட்டு கை கட்டி எழுந்து மௌனமாக நின்றான்.

லக்சன் திகைத்துப்போனான். பயந்து போனான். மிரண்டுபோன கண்களுடன் தாயைப் பார்த்தான். அவன் மாவீரனுக்கு அஞ்சலி செய்ததைப் பார்த்த அக்கா, வேதனையுடன் தலையைக் குனிந்து கொண்டாள். நான் இளவேங்கை ஒன்றைப் பெற்றெடுத்தாற் போன்ற பெருமையுடன் தலையை நிமிர்த்தி இருந்தேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## இரு வாரத்துக்கு ஒருமுறை கடிதம் மூலம் சந்திப்போம்!

**அன்புச் சகோதரமே!**

எங்கள் தமிழீழ மண்ணை ஆக்கிரமிக்க எங்கள் தமிழீழ மக்களை அடிமை கொள்ள புதிய புதிய களங்களைத் திறக்கும் சந்திரிகா அரசாங்கம் ஒவ்வொரு களமுனையிலும் பேரிழப்புக்களைச் சந்தித்து பின்னடைவது சமீபகால வரலாறு. ஆனாலும் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் இனவெறி அடங்கிய பாடாகஇல்லை.

கடந்த மாதம் சிறுவர்களுக்கு போலியோ தடுப்பு ஊசி போடவென ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் கேட்டுக் கொண்டதற்கு அமைய தமிழீழ விடுதலைப் புலிகள் இருநாட்கள் யுத்தநிறுத்தம் செய்தனர். அந்த யுத்தநிறுத்தம் முடிந்த கையோடு சிங்களப்படைகள் ரணகோஷ 5 நடவடிக்கையில் இறங்கினர். முன்னூறுக்கு மேற்பட்ட சிறீலங்கா படையினர் உயிர்களை இழந்து எழுநூறுக்கு மேற்பட்ட சிங்களப்படையினர் காயமுற்ற நிலையில் அம்முயற்சி தோல்வியுற்றது.

இம்முறையும் அதே பாணியில் இந்தமாதமும் 'நீர்ச்சிந்து'என்ற குறியீட்டுப் பெயருடன் இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டு, அம்பகாமம் வன்னிக்குளம் பகுதியூடாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியை ஆக்கிரமிக்க முயன்றனர். இந்த முயற்சியையும் விடுதலைப் புலிகள் வெற்றிகரமாக முறியடித்தனர். நூற்றுக்கு மேற்பட்ட சிறீலங்காப் படையினர் உயிரிழந்து நானூற்றுக்கும் மேற்பட்ட படையினர் காயமுற்ற நிலையில் அம்முயற்சியும் தோல்வியில் முடிந்துள்ளது.

இவ்வாறு புதியபுதிய கள முனைகளை திறந்து பேரழிவுகளைச் சந்திக்கும் சிறீலங்கா அரசாங்கம் தனது இராணுவத்தோல்விகளை தமிழ் மக்களை வதைப்பதன் மூலம் ஈடுசெய்ய முற்பட்டு வருகிறது. இதனால் சிறீலங்கா அரசாங்கத்தால் திறந்தவெளிச் சிறைச் சாலையாக்கப்பட்டு இராணுவ ஆட்சிக்கு உள்ளாக்கப்பட்டிருக்கும் யாழ்ப்பாணக் குடாநாடு முதல் கொழும்பு வரை தமிழ் மக்கள் சொல்லொணா மனிதவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டு வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. காரணமின்றி கைது செய்தல், முகாம்களுக்கு கொண்டு சென்று வதைத்தல், கண்டவாறு சுட்டுக் கொல்லுதல் போன்ற சம்வங்களும் பாலியல் வன்முறைகளும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

இவற்றுக்கு சிகரம் வைத்தாற்போல் வங்காலைப் பகுதியில் அப்பாவித் தமிழ் மக்கள்மேல் சிங்களப் படைகள் நடாத்திய வெறியாட்டத்தில் 20 இலட்சம் ரூபா மதிப்புள்ள தமிழ் மக்களின் குடியிருப்புக்கள், உடமைகள் எரித்தும் உடைத்தும் நாசமாக்கப்பட்டுள்ளன. கத்தோலிக்க குரு தேவசகாயம்பிள்ளை ஆலயத்தில்வைத்து மிரட்டப்பட்டுள்ளார்.

கொழும்பில் பெருமளவில் தமிழர்கள் கைதாவது அதிகரித்து வருகிறது. யாழ்ப்பாணத்தில் இளவயதினர்கள் இராணுவத்தினரால் கைதாக்கப்பட்டு இழுத்துச் செல்லப்படுகின்றனர்.

இவ்வாறாக எமது கிட்டிய குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள், நண்பர்கள், ஊரவர்கள், தேசத்தலைவர்கள் தினம் தினம் வதைக்கப்படுவதை பார்த்துக் கொண்டு நாம் மௌனமாக இருக்க முடியாது. சிறீலங்கா அப்பாவித் தமிழ் மக்களுக்கு செய்துவரும் கொடுமைகளை உலகிற்கு அம்பலப்படுத்த வேண்டிய பொறுப்பு புலம்பெயர் தமிழர்களாகிய எங்களுடையது.

பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைப்பு பணியில் ஈடுபட்டுள்ள நம்மவர்களுக்கு நிதி உதவிகள் அளிப்பதன் மூலம் அவர்களுக்கு சிறீலங்கா செய்யும் இனத் துன்புறுத்தல்களின் துன்பங்களை மாற்ற நாம் உதவுகிறோம் என்பதை மறக்கக் கூடாது.

இந்த இரண்டு பணியிலும் நாம் எம்மால் இயன்ற அளவுக்கு துரிதமாக பங்குகொண்டு சிறீலங்காவின் மனிதாயத்திற்கு எதிரான குற்றச் செயல்களினால் நம் தேசமும் மக்களும் படும் துன்பங்கள் விரைவில் மாற உதவுவோம்.

வணக்கம்
அன்பின் ஆசிரியர்
(21.10.1999)

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

## பாதங்கள் பார்த்து சுவடுகள் காத்திருக்கின்றன...

யக்கதிரை சுட்டெரிக்கப் புறப்பட்டான். யாழ். நகரத்தின் தலைவாசலில் இராணுவம் வந்திருந்தது. நாவலர் வீதிச்சண்டை எழிலரசனின் திறமைக்குச் சான்றானது. ஒரே நாளில் பல இராணுவத்தினர் எழிலின் துப்பாக்கிக்கு அடிபணிந்தனர்.

யாழ். குடாநாட்டின் இதயத்தை சப்பாத்துக்கள் நசித்தன. அன்றலர்ந்ததாமரை போலிருந்த யாழ்மண் அரக்கனின் காலடியில் கசங்கியது. தந்திரோபாயமாக புலிவீரர் வன்னிக்கு வந்தனர். எழிலரசனின் பணி வன்னியிலும் தொடர்ந்தது. மேலதிக பயிற்சிக்காக அனுப்பப்பட்டான். பயிற்சி என்பது அவனுக்கு அல்வா சாப்பிடுவது மாதிரி. பதுங்கிச்சுடும் சூட்டுப்பயிற்சியின் போது அவனது சூடுகள் இலக்கை முத்தமிடத் தவறுவதில்லை. 'பட்டிருக்கும்' என்று அவன் கூறினால் அந்தத்ரவை கண்டிப்பாக மையத்தை ஊடுருவியிருக்கும். இது பிசகி விட்டது என்று அவன் கூறினால் இலக்கைப் போய்ப் பார்க்கத் தேவையில்லை. முன்கூட்டியே தன் சூடுகளை மதிப்பிடும் திறன் அவனுக்கேயுரியதாகும்.

வன்னியில் இவனது முதற்களம் ஓயாத அலைகள் நடவடிக்கையாகும் வெண்கலக் கடையில் யானை புகுந்தது மாதிரி முல்லைத்தீவு முகாம் சின்னாபின்னப்படுத்தப் பட்டது. இதில் எழிலுக்கு அதிக வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை. ஆனால் சத்ஜெய நடவடிக்கையில் இவனது துப்பாக்கியிலிருந்து புறப்பட்ட பல ரவைகள் எதிரி இரத்தத்தின் சுவையை அறிந்து கொண்டன. சண்டை மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. இவனது நிலைக்கு அண்மையாக ஒரு போராளியின் உயிரற்ற உடல் வெய்யிலுக்குள் கிடந்தது. இவனது இதயத்தை குண்டுசி ஒன்று கீறிச் சென்றது. உயிர்பிரிந்த பின்பும் நண்பனின் உடல் வெய்யிலில் வேகக்கூடாது. எறிகணைகளின் சீறலுக்கு மத்தியிலும் ஓடிச் சென்று அவ்வித்துடலை நிழலில் வைத்துவிட்டு வந்தான். பின் எடிபலவில் இவனது துப்பாக்கி ரவைகளைத் துப்பியது. எந்நேரமும் எதிரி இலக்குகளைத் தேடித்திரிவதே இவனது பொழுது போக்கு. காவலரணில் எதிரியின் தலைக்கறுப்பு, ஒரு சூடுதான்; எதிரியின் கெல்மற் சிவந்திருக்கும்.

நாட்காட்டி சுருங்கியது 'ஜெயசிக்குறுய்' திடமான பெயரிட்டான் எதிரி. காவியுடுப்புக்காரர் நல்லநாள் பார்த்துக் கொடுத்தனர். வன்னியின் இதயத்தைக் கிழிப்பதே நோக்கம். 'வாங்கடா, வழிமேல் விழிவைத்துள்ளோம்'. புலிவீரரும் திடம் கொண்டனர். மாரித் தவளைபோல் வானொலிகள் வெற்றி முழக்கமிட்டன. புலிகள் அழிந்தனர். போர் முடிந்தது. பழம் பறிக்கும் நேரத்துக்காக காத்திருந்தனர் புலிகள். தாண்டிக்குளத்தில் முதல் தூண்டில், ரத்வத்தவின் வாய் கிழிந்தது. பெரியமடுவில் ஆப்பிழுத்த குரங்கானது.

எழிலரசன் படையணிக்கு மாற்றப்பட்டான். ஓர் அணியை பொறுப்பேற்றான். இவனது அணியும் திறமைமிக்கதாயிருந்தது. ஓமந்தையில் வந்து நின்று, பட்ட காயங்களுக்கு எதிரி புனுகு பூசிக்கொண்டிருந்தான். 01.08.97 அன்று எதிரியின் காவலரண்கள் மீது புலிகள் ஏறிநடந்தனர். முதல் இரண்டு ஊடறுப்புத் தாக்குதலுக்கும் செல்லவில்லையென்ற ஆதங்கம் எழிலரசனிடம் இருந்தது. இத்தாக்குதலில் அவனது துப்பாக்கியிலும் நெருப்புப் பூத்தது. அழகுக்கு மயில், பேச்சுக்கு கிளி, தந்திரத்திற்கு நரி. இல்லையில்லை புலிவீரர், வேகத்துக்கு சிறுத்தை, இல்லவேயில்லை, இதற்கும் புலிவீரர். ஓமந்தையில் நிரூபணமாயிற்று. பொயின்ற் எல்லாம் பிடிச்சிட்டம். இப்ப கிளியர் பண்ணிக்கொண்டிருக்கிறம். ஆமியின்ர பொடிகள், ஆயுதங்கள் எல்லாம் நிறையக் கிடக்குது. எழிலின் குரல் ஓமந்தையில் கேட்டவண்ணமேயிருந்தது.

மழை பொழிவது மண்ணுக்கு தன்னை அர்ப்பணிக்கவே. காற்று வீசுவது உலகம் உயிருடனிருக்கவே. மரங்கள் வாழ்வது உயிர்களை வாழவைக்கவே. மெழுகுதிரி தன்னை உருக்குவது உலகிற்கு வெளிச்சம் தரவே. புலிவீரர் வீழ்வது தமிழீழ விடியலுக்கே. கூவிவந்த செல்லொன்று எழிலர்சனின் அருகே வீழ்ந்து வெடித்தது. வெற்றியில் பூரித்திருந்தவனின் தலையை சிதறு துண்டொன்று தாக்கியது. ஓமந்தை மண்ணில் அவனது குருதி படர்ந்தது. தமிழீழக் காற்றோடு அவனது உயிர் கலந்தது.

மரணத்தால் உன் உயிரைத் திருட முடிந்தது. உன் புன்னகையை, பொலிவை அதனால் திருடமுடியவில்லை. உனது குரல், உனது குறும்பு, என் இதயத்தில் இன்னும் பசையாய் ஒட்டியிருக்கிறது. எனக்கு தாகமெடுக்கும் போதெல்லாம் இப்போதும் என் அருகில் நீரோடையாய் ஓடி வருகிறாய் நீ. உன்னை விதைகுழியில் வைத்து ஒருபிடி மண்போட்டேன். போட்டதும் கையைத் திறந்தேன், அதிலும் உன் முகந்தான். ஆயிரமாயிரம் மாவீரருடன் நிம்மதியாக நீயும் உறங்கு. மழையின் பயணம் மண்ணைத் தொடும்வரை ஓயாது. எமது பயணமும் தமிழீழம் காணும்வரை ஓயாது.

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கு வடிவம் கொடுக்க திட்டமிட்டவர்அன்றைய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலி. என்னவெனில் சிங்களத் தொகுதி ஒவ்வொன்றிலும் இருந்து 1000 பேர்களைத் தெரிவு செய்து பயிற்சி அழித்து ஆயுதம் வழங்கி குடியமர்த்தல். இதன் மூலம் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்.

இன்றைக்கு 4 வருடங்களின் பின்பு பி.ஏ. அரசு இதனை நடைமுறைப்படுத்த முனைந்தது, ஜெயசிக்குறு வடிவில். எனினும் 14 வருடங்களாக சிங்கள அரசால் அதனைச் செய்ய முடியவில்லை யெனில் அதற்குக் காரணம் எமக்குள் எழுந்த குடியேற்றத்திற்கு எதிரான கருத்து மாற்றமே. (எமது போராட்டத்தை வழிநடாத்தும் தலைவரினதும் மற்றும் மாவீரர்கள், போராளிகள், மக்கள் அனைத்து தியாகங்கள் அர்ப்பணிப்புகள்) சிங்கள மக்களைக் குடியமர்த்த முடியாத அரசு சிங்களக் கூலிப்படைகளை நிறுத்தியுள்ளது. அதனையும் இல்லாது செய்யமுடியும். அதற்கு மேற் குறிப்பிட்டவர்களுடன் சேர்ந்து தோள் கொடுக்க வேண்டும். முழுமையான ஒரு அர்ப்பணிப்பே கருத்து மாற்றமாகக் கொள்ளப்பட முடியம். (எனவே குடியேற்றத்திற்கு எதிரான கருத்து மாற்றம் என்பது எமது தாயகத்தை நிலை நிறுத்துவதற்கான பங்கு பற்றலையே குறித்து நிற்கின்றது)

சிங்களக் குடியேற்றங்களால் தமிழர்தாயக நிலப்பகுதிகளான திருமலை, சேருவெல தொகுதியும், மணலாறு வெலிஓயா எனவும், அம்பாறை திகாமடுல்ல எனவும் தாயகத்தின் அடையாளங்கள் அழிக்கப்பட்டன. இதனை எதிர்த்த போதெல்லாம் சிங்களப் பேரினவாதிகளால் எச்சரிக்கையாக 'துட்டகைமுனு இன்னும் சாகவில்லை 'தமிழர்க்கு என்றுமே பூர்வீக நிலங்கள் இருந்ததில்லை' என்று இனவாதம் கூச்சல் போட்டது. தமிழர்கள் சிறீலங்காவின் பூர்விக குடிகளல்லர் என்ற கருத்தை தென்ஆபிரிக்காவில் தற்போதைய சனாதிபதி கூறியுள்ளதையும் இப்படியே அவதானிக்கலாம்.

எனவே அன்றுதொட்டு இன்றுவரை சிங்களவர்கள் தமது கொள்கையில் தெளிவாக உள்ளனர். ஆனால் எம் இனத்திற்கு தான்வரித்துக்கொண்ட கொள்கைக்கு முழுமையாக பங்களிப்பதற்கு ஏன் தளம்பல்கள் ஏற்படுகின்றது என்பது இன்னும் புதிராகவே தோன்றுகிறது.

## போருக்கான வாழ்வை அமைப்பதன் மூலம் போர் முற்றுகை வாழ்வை ஒழிக்க முடியும்.

தமிழீழத்தில் வாழ்கின்ற அனைத்து குடிமக்களினதும் வாழ்வில் ஒவ்வொரு அணுவிலும் போரின் தாக்கமானது ஆதிக்கம் செலுத்துகின்றது. கருவில் இருந்து கல்லறை வரை இது தொடர்கின்றது. இது ஓர் இயல்பானதாக இன்று தோன்றினும் நீண்ட காலத்தில் பாரிய அழிவினை ஏற்படுத்தும் என்பதனை நாம் நினைப்பதில்லை. இதனை மாற்றி போருக்காக நாம் வாழ்வை மாற்றிக் கொள்ளவேண்டும். போர் முற்றுகையினால் திக்கு முக்காடும் நாம், அதிலிருந்து மீள்வதற்கு அதனை எதிர்த்து முழுமையாகக் கடமையாற்ற வேண்டும். மாறாக அதிலிருந்து ஒதுங்குவதோ-விலகியிருப்பதோ தற்காலிக அமைதியையே தரும். ஒவ்வொரு அங்கத்தினரும் இந்தத் தற்காலிக அமைதியைத் தேடிச் செல்லும்போது மீதியாக இருக்கும் அவர்களின் உறவுகளையே மேன்மேலும் போரின் பழு தாக்கும். எனவேதான் போர் முற்றுகை வாழ்வை உடைத்து போருக்காக வாழ்க்கையை அமைப்பதற்கு முழுமையான கருத்து மாற்றம் அவசியம் எனப்படுகிறது.

'மிகத் தொன்மை வாய்ந்த நீண்ட வரலாறுடைய எந்தவொரு கலாச்சாரத்திலும் பழைமைவாதக் கருத்துக்களும் பார்வைகளும் காலத்துக்கு ஒவ்வாத வழக்குகளும் சம்பிரதாயங்களும் மூடநம்பிக்கைகளும் வேரூன்றியிருப்பது இயல்பு. எமது கலாச்சாரமும் இதற்கு விதிவிலக்கல்ல. கலாச்சாரம் என்ற கோலத்தில் எமது சமூக வாழ்வில் ஊடுருவி நிற்கும் பிற்போக்கான பண்புகளை, வழக்குகளை கருத்தோட்டங்களை நாம் இனம் கண்டு களைதல் அவசியம்'.

தமிழீழத் தேசியத் தலைவர்
திரு.வே.பிரபாகரன் அவர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இந்த மண்ணும் அந்த அன்னியநாட்களும்

எழுவான் திசையைக் குருதிச் சேறாக்கி
வானத்தில் பிரசவம் நடக்கும்:
முகம்மலர்த்திப் பிள்ளைச் சூரியன் பிறப்பான்.
பனிநீராடிய மரங்கள் குங்குமப் பொலிவோடு சிரிக்க
இருள் விலகும்.
காணும் பொருளனைத்துக்கும்
யார்தான் காற்கொலுசு பூட்டுவரோ?
எல்லாமே செல்லமாகச் சிணுங்கியபடி சிலிர்க்கும்.
மெல்லியகுளிரும் பூவாசமுமாக முற்றமிருக்கும்.
கூடுவிட்டு விடுதலைப் பண்பாடி
விரித்தசிறகெடுத்துக் குருவிகள் வந்திறங்கும்.
வேலிவிட்டிறங்கும் கோழிகள்.
வெறுந்தரையானாலும்
விளைந்த வயலானாலும்
அவையழகு ஆயிரம் கோடிக்குத் தகும்.
ஏதோ உலகஇயக்கமே தன்னசைவிற்தான் என்பது போல்
கோயில் மணிகளின் நாதம் காற்றிலிழையும்.
கோபுரப்பறவைகள் சிறகடித்துப் பறந்து
திரும்பவும் வந்து குந்தும்.
பூமி ருதுப்பெறும் பொழுதிதுதான்.
கட்டவிழ்த்த கறவைமாடுகள் மேச்சலுக்குப் போகும்.
ஏரிநிமிர்த்தி வயலேகும் நாம்பன்கள்
புத்தகச் சுமையோடு பள்ளிக்குச் செல்லும்
வண்ணத்துப் பூச்சிகளால் தெருக்கள் வடிவுபெறும்.
கலகலத்தோடும் அந்தச் சிறுநதிகளின்
பிஞ்சுப்பாதங்கள் தொடும் வீதிகள்
புண்ணியம் செய்தன.
நகர்நோக்கிப் போகும் பேருந்துகள்
ஊரில் ஏகாந்த அமைதிகுலைத்து ஏகும்.
வண்டில்கள்— தாளச்சுருதிக்குச் சரியாகக் குடக்கடித்து
கிடுகேற்றி வரும்.
இப்படித்தான் – எத்தனை அழகோடு
இந்தமண்ணின் அந்தநாட்கள் இருந்தன.
நெஞ்சில் சுமையற்ற நிறைவுடன்
மண்ணுடன் இணைந்த வாழ்விலொரு மகிழ்விருந்தது.
தெருவிளக்குகளற்ற இருள்கவிந்த வீதிகளெனினும்
பயமற்றிருந்த பரவசம் எமக்கு.
அச்சமில்லாத வாழ்வின் அழகில்
எம் ஜீவிதத்துக்கு ஒரு அர்த்தமிருந்தது.
மரங்களுடன்கூட இழைபிரியா உறவிருந்தது.
வேலையும் உழைப்புமாகப் பகலும்
ஆடலும் பாடலுமாக இரவும்
வருவதும் போவதுமாக அறியாமல் கழிந்ததெம் காலம்.
வெளியுலகம் விஞ்ஞானத்தைச் சுற்றிச் சுழன்றது.
எங்கள் வாழ்வுமட்டும் அதே அழகுடன்
அதே எளிமையுடன்
அதே பேரமைதிப் பொலிவுடன்
முகத்தில் இதழ்பிரியாச் சிரிப்புடன் இருந்தது.
உலகெங்கும் ஊர்கள் இப்படித்தான்
இருந்ததெனினும்
அழகிருந்தது எங்கள் பூமியிற்தான்.
எங்கள் முகத்திலும் வடுக்கள் இருந்தன
கைகளிற் கறைகள் இருந்தன
எங்கள் பக்கங்ளிலும் இருண்டபக்கங்களிருந்தன.
எல்லாமே இருந்தன தான்.
ஆயினும் எம்மூர்களின் அழகிருக்கிறதே
அது வார்த்தைகளால் வடிவமைக்க முடியாத
பேரெழிற் சிற்பம்.
கவிதைகளால் கட்டமைக்கமுடியாத கட்டுமானம்.
ஒருநாளெனினும் இங்கு வாழ்ந்தவர்களுக்கே
இதை உருவகமாக்கி உணர்த்தமுடியும்.
வையப் பரப்பெங்கும் அகதிகளாக அலையும்
தேசபுத்திரர்களின் நரம்புகளைச் சுரண்டிப் பாருங்கள்
அந்த உணர்வுக் கொப்பளிப்பில்
ஊரின் அழகே தெரியும்.






– வியாசன்

கால நிர்ப்பந்தத்தினால் அலையெற்றிய சருகாய்
எங்கெங்கோ கரையொதுங்கிய இதயங்களைக் கேளுங்கள்
விழிக்கசிவுடன் வெளியே வழிவது
ஊரின் உந்நதங்களே.
நீரடித்துப் பிரியாத நீராய்
தாயடித்து நோவாத சேயாய்
மறக்கமுடியுமா அந்த மகோன்னதமான நாட்கள்?
இத்தனை அழகையும் தான்
அடித்து வாயிற்போட வந்தனர் அவர்கள்
எல்லாவற்றையும் இல்லாதனவாக்கினர்.
சின்னக் கூடுகட்டி வாழ்ந்த ஜீவிதத்துக்கும்
வண்ணம் கலையாதிருந்த எங்கள் வாழ்வுக்கும்
என்னதான் நடந்தது?
ஒரு விளக்கியெடுத்த குத்துவிளக்குப் போல
கன்னம் குழிவிழச் சிரிக்கும் சின்னக் குழந்தையைப் போல
நிர்மலமாகக்கிடக்கும் நீலவான விதானத்தைப் போல
இருந்த வாழ்வைத்தானே இல்லாமற்செய்தனர்.
வேர்கருகிக்கிடக்கிறது விருட்சம்.
துக்கித்துக் கிடக்கிறதெம் சோபிதம்.
ஏர்கீறிய எங்களின் தாய்மடியை
இன்று யந்திரயானைகள் உழக்குகின்றன.
பழங்கள் மட்டும் விழுந்த பூமியின் மேனியில்
இன்று குண்டுகள் விழுந்து குழியாக்குகின்றன.
எந்த நேரமும் எதுவும் நடக்கலாம்
செவ்வந்திப்பூவாய் சிரிப்புப் பூப்பூத்திருந்த தேசம்
கம்பிகளுக்குள்ளே இப்போ கண்ணீர்வடிக்கிறது.
கள்ளிச்செடிகளின் கையிடுக்குகளுக்கிடையே தான்
முல்லைப்பூக்களிப்போ மூச்சுவிடுகின்றன.
குயிலிருந்து பாடிய கொம்புகளிலிருந்து
ஆந்தைகள் அலறுகின்றன.
சாக்காடாய் போனது சந்தனப்பூமி.
நாமெல்லாம் தனித்தனித் தீவுகளாகி
நிர்ப்பந்த நீர் சூழ்ந்துள்ளோம்.
எட்டாத் தொலைவில் எல்லா உறவுகளுமென்றாச்சு.
தும்மினாலே ஓடிவந்துபார்க்கும் சொந்தங்கள்
செத்தாலே வரமுடியாத் தொலைவென்றாச்சு.
எப்படிச் சிரிக்கும் எங்கள் முகங்கள்.
ஒப்பாரியும் எம்தேசமுமே இப்போது உறவாச்சு.
பனிவிழும் தேசங்களிலும்
பாலைவனச் சுடுபுழுதியிலும்
பூமிப்பந்தின் எல்லாப் புள்ளிகளிலும்
வகை தொகையின்றி வாழும் எம் சொந்தங்களே
இனிக் கவலைகளைக் காச்சிப் பாகுசெய்து
மதுரச் சுவையாக்கி மகிழ்வோம்.
என்றினிக் காண்போமென்ற ஏக்கத்தைத் தொலைத்து
ஊர்திரும்ப நீங்களும் நாங்களும் உழைப்போம்.
வாழுமெம் தொப்பிள்கொடி உறவுகளே
தாய்நிலத்தை மீளமைக்கும் பணிக்கு
நாமிருக்கிறோம் என்ற உங்களின் குரல்கள்
வந்தெம் காதுரசும்போது எத்தனை மகிழ்ச்சியாய்
இருக்கிறது.
சிறைப்பட்டிருக்கும் சிட்டுக்குருவிகளாய்
நாங்களிங்கு சிக்குண்டுள்ளோம்.
எனினும் விரைவில் விலங்குடைத்து
மீண்டும் சிறகுவிரிப்போம்.
கூண்டுடைத்து வெளியெ குதிப்போம்.
வசந்தம் வரும்
குயிலின் குக்கூச் சத்தம் அடிவளவு மாமரத்தில் எழும்.
முகம்திருத்திய முற்றத்துப் பூமரத்தில் பூக்கள்
குங்குமம் பூசிக் குதுகலிக்கும்
நீங்கள்; வருவீர்கள்
நீங்கள்; வந்திறங்கும் வாசலில் நாங்கள் வழிபார்த்திருப்போம்.
மீண்டும் இங்கே வசந்தத்தின் பூவாசம் வந்து
எம் மேனிதழுவும்.
பாட்டும் கூத்துமாக எம் பகலிரவு கழியும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்